# தினக்குரல்
யாழ் தினக்குரல் THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com

ஓசை : 020 குரல் : 256 வியாழக்கிழமை 25 நவம்பர் Thursday 25th November 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12


## கிண்ணியா சம்பவம்; மூவர் கைது

திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் இடம் பெற்ற அனர்த்தம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் பொருத்தப்பட்ட இந்த படகுப் பாதையை இயக்கிய மூவரே இவ்வாறு பக்கம் 02

## மு.கா. எம்.பிக்கள் மூவர் இடைநிறுத்தம்

பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது, கட்சியின் உச்ச பீடத்தின் தீர்மானத் திற்கமைவாக செயற்படாது வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் அவர்களில் பக்கம் 02

# இது தமிழர் தேசம் அல்ல

### சிங்களவர் தேசம் என அரசு தரப்பு பின்வரிசை எம்.பி.க்கள் பாராளுமன்றில் கூச்சல்
### "தமிழர் தேசம்", "தேசியத் தலைவர் பிரபாகரன்" வார்த்தைகளுக்கு கடும் எதிர்ப்பு

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி.யான செல்வராசா கஜேந்திரன் பயன்படுத்திய தமிழர் தேசம், தேசியத் தலைவர் பிரபாகரன் என்ற வார்த்தைகளினால் வெகுண்டெழுந்த அரச தரப்பினர் உடனடியான அந்த வார்த்தைகளை ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறு வலியுறுத்திய போதும் சபைக்கு பக்கம் 02

## பிரபாகரனின் ஒழுக்கம் குறித்து யுத்தத் தளபதிகளே புகழ்ந்தனர்

-அடிமை டக்ளஸுக்கு இது புரியுமா?- கஜேந்திரன் எம்.பி.

பா. கிருபாகரன் -
ந. ஜெயகாந்தன்



யுத்தத்தை களத்தில் இருந்து தலைமை தாங்கி நடத்திய இரண்டு தளபதிகளான சரத் பொன்சேகா மற்றும் கமல் குணரட்ன ஆகியோரே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஒழுக்கத்தை புகழ்ந்துள்ள நிலையில், அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா அவரை பக்கம் 02

## 65 வயது கட்டாயமில்லை; 55 இற்குப் பின் ஓய்வுபெறலாம்

பா. கிருபாகரன் -
ந. ஜெயகாந்தன்

அரச ஊழியர்கள் தமது 55 வயதை நிறைவு செய்த பின்னர் விரும்பிய முறையில் ஓய்வுபெறும் காலத்தை தீர்மானித்துக் கொள்ள முடியும்.ஏனெனில் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 65 என்பதை அரசாங்கம் கண்டிப்பாக்கவில்லை என பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம் பெற்ற புத்தசாசன ,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள்,மற்றும் கிராமிய கலைநுட்ப , மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, பக்கம் 02

## குண்டு வீச 3 இலட்சம்; கூலிப் படைக்கு பேரம்

-யாழில் சிக்கியவர்கள் அதிர்ச்சி வாக்குமூலம்-



யாழ்ப்பாணம் உடுவில் அம்பலவாணர் வீதி பகுதியில் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு வீடும் சேதப்படுத்தப்பட்ட நிலையில் இந்தத் தாக்குதலை நடத்துமாறு சுவிஸில் இருந்து தமக்கு 3 இலட்சம் ரூபா பணம் அனுப்பப்பட்டதாக தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் தெரிவித்துள்ளனர். பக்கம் 02

## இலங்கை மனித உரிமை நிலைவரம் தொடர்ந்து மோசம்

-பிரிட்டனின் வருடாந்த அறிக்கையில் தெரிவிப்பு



2021ம் ஆண்டின் முதல் அரையாண்டு பகுதியில் இலங்கையில் மனித உரிமை நிலைவரம் தொடர்ந்தும் மோசமடைந்து வந்ததாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள வருடாந்த மனித உரிமை அறிக்கையிலேயே இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்த கவலை வெளியாகியுள்ளது.

31 முன்னுரிமைக்குரிய நாடுகளில் ஜனவரி முதலாம் திகதிமுதல் ஜூன் 30 ம்திகதி வரையிலான காலப்பகுதியில் காணப்பட்ட மனித உரிமை நிலைவரம் குறித்து பிரிட்டனின் அறிக்கையில் பக்கம் 02

## நிரந்தர சமாதானத்திற்காக அமெரிக்கா இலங்கை தமிழர்களுடன் இணைகிறது

அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர்



இலங்கை தொடர்பான அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையில் மனித உரிமைகள் முக்கியமானவை என அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ தெரிவித்துள்ளார்.

அத்தோடு, நிரந்தர சமாதானத்திற்காக இலங்கை தமிழர்களுடன் அமெரிக்கா இணைகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பு குறித்து தெரிவித்துள்ள பக்கம் 02

## திமிர் பிடித்த அமைச்சர்கள் திறமையற்ற அதிகாரிகள்!

கோரிக்கைகள் தீர்க்கப்படும் வரை வேலைநிறுத்தம்

க.பிரசன்னா



திமிர் பிடித்த அமைச்சர்களினாலும் திறமையற்ற அதிகாரிகளினாலும் பொது மக்கள் அவதியுறுவதாகவும் தமது கோரிக்கைகள் தீர்க்கப்படும் வரை தொடர்ச்சியாக வேலைநிறுத்தப் போராட்டம் பக்கம் 02

## சமையல் எரிவாயு சிலிண்டர்கள் எவ்வேளையும் வெடித்துச் சிதறலாம்

கலவையில் அளவில் மாற்றம் என எச்சரிக்கை

பா. கிருபாகரன் -
ந. ஜெயகாந்தன்



வீடுகளில் பாவிக்கும் சமையல் எரிவாயுவின் கலவை அளவில் மாற்றம் செய்துள்ளதால் காஸ் சிலிண்டர்கள் எவ்வேளையிலும் வெடித்து சிதறும் அபாயம் இருப்பதாக நுகர்வோர் விவகார நடவடிக்கைகள் அதிகாரசபையின் பக்கம் 03

## பெற்றோலியம், இயற்கை வாயு எடுக்க மன்னாரில் கம்பனி

-நிறுவுவதற்கு அரசு தீர்மானம்

க.பிரசன்னா

மன்னார் அகழி எம் 2 நிலப்பரப்பில் அடையாளம் காணப்பட்டுள்ள பெற்றோலிய மற்றும் இயற்கை எரிவாயுப் படிமத்தை முறையாக நிர்வகிப்பதற்கு ஏற்றவகையில் தேசிய பெற்றோலிய மற்றும் இயற்கை வாயு கம்பனியொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தக் கம்பனிக்கு 2021 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் V ஆம் பகுதியின் பிரகாரம் பக்கம் 02

## தனியார் பேருந்துகளின் சேவை நிறுத்தப்படுமென எச்சரிக்கை

க.பிரசன்னா



தனியார் பஸ் சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தவறினால் அடுத்த வருடம் மத்தியிலிருந்து சகல தனியார் பஸ்களும் சேவையிலிருந்து பக்கம் 07






## 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர்

3 ஆவதாக பைசர் தடுப்பூசி விரைவில்



இலங்கையில் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் மூன்றாவதாக பைசர் கொவிட்-19 தடுப்பூசி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பக்கம் 02




# கிண்ணியாவில் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறினார் ரிசாத்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியூதீன் நேற்று கிண்ணியாவிற்கு சென்று அசம்பாவிதத்தில் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து துக்கங்களை பகிர்ந்து கொண்டார். கிண்ணியா குறிஞ்சாகேணியில் பாதை விபத்துக்குள்ளாகி ஆறு பேர் உயிரிழந்தனர். இச்சம்பவம் கிழக்கில் சோகமயமான நிகழ்வாக மாறியிருந்த நிலையிலே நேற்று கிண்ணியாவிற்கு சென்ற ரிசாத் பதியூதீன் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். இதன் போது திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப் மற்றும் கட்சி ஆதரவாளர்களும் கலந்து கொண்டார்கள்.

## தனியார் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலகுமென அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ்கள் கடுமையான நட்டத்தில் இயங்கி வருகின்றன. தற்போது சேவையில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கையினை ஜனவரி மாதம் முதல் அரைவாசியாக குறைப்பதற்கான நிலைமை ஏற்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்தில் பயணிப்பதால் கொவிட் தொற்று சமூகத்தில் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் பொதுமக்கள் சொந்த வாகனங்களை அல்லது வாடகை வாகனங்களை பயன்படுத்தும்படி கொவிட் தடுப்பு செயலணியினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் பிரசாரத்தினாலும் தனியார் பஸ் சேவைகள் சீர்குலைந்துள்ளன.

வருமானம் குறைவடைந்துள்ளதாலும் செலவுகள் அதிகரித்துள்ளமையினால் தொலை தூர சேவையில் ஈடுபடும் பஸ்கள் உட்பட தனியார் பஸ்களின் எண்ணிக்கையில் அரைவாசியே தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பயணிகளின் குறைவினாலும் தொடர்ந்து சேவையினை முன்னெடுக்க முடியாதுள்ளதுடன் டயர், ரியுப் பற்றரிகள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களின் விலைகளும் சடுதியாக அதிகரித்துள்ளன. மாற்று போக்குவரத்து வழிமுறைகளை அமுல்படுத்தாவிட்டால் வீதிகளில் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படும்.

தனியார் போக்குவரத்து உரிமையாளர்களுக்கு தற்போது செலவுகள் அதிகரித்துள்ளன. பெரும்பாலான உரிமையாளர்களுக்கு இதுவே பிரதான வருமான மார்க்கமாகவும் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இது தமிழர் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை தாங்கிய வேலுகுமார் எம்.பி. அதற்கு மறுத்துவிடவே சபையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது. அத்துடன் இது தமிழர் தேசம் அல்ல சிங்களவர் தேசம் என அரசு தரப்பின் பின் வரிசை எம்.பி.க்கள் கூச்சலிட்டனர்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற புத்தசாசன ,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,தேசிய மரபுரிமைகள் ,அருங்கலைகள்,மற்றும் கிராமிய கலை நுட்ப ,மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அரசாங்க சேவைகள்,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலைவிவாதத்தில் உரையாற்றிய கஜேந்திரன் எம்.பி. தனது உரையில் தமிழர் தேசம் தேசியத் தலைவர் பிரபாகரன் என்ற வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்தினார்.

இதனால் சீற்றமடைந்த இராஜாங்க அமைச்சரான சீதா அரம்பொல,ஒழுங்குப்பிரச்சினை எழுப்பி,

இந்த உயர் சபையில் தேசியத் தலைவராக பயங்கரவாத தலைவரின் பெயரை குறிப்பிட்டுள்ளார். தலைமை தாங்கும் உங்களுக்கு (வேலுகுமார் எம்.பி) இந்த மொழி புரிந்திருக்கும். இதனால் இதனை ஹன்சாட்டில் இருந்து நீக்குங்கள் என்றார்.

இதன்போது பதிலளித்த சபைக்கு தலைமைதாங்கிய வேலு குமார் எம்.பி கூறுகையில், அது அவரின் கருத்து வெளியிடும் உரிமையே, அதற்கு என்னால் இடையூறு செய்ய முடியாது. உங்களுடைய கோரிக்கை இருந்தால், நான் அதனை சபாநாயகரிடம் முன்வைக்கின்றேன் என்றார்.

இதன்போது எழுந்த அரச தரப்பு எம்.பி.யான முஸம்மில்,

விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். இந்த நாட்டில் இலட்சக் கணக்கில் மக்களை கொன்றவரை வீரராக கூறி இந்த சபையில் கருத்து வெளியிட முடியாது. இது அவரின் கருத்து இல்லை. இது இனவாதத்தை உண்டாக்குவதாகும். இதனை சபைக்குள் கொண்டுவர முடியாது. தயவு செய்து அந்தக் கருத்தை ஹன்சாட்டில் இருந்து நீக்குங்கள், நீங்களே இப்போது சபைக்கு தலைமை ஆசனத்தில் இருக்கின்றீர்கள். இதனால் நீங்கள் ஹன்சாட்டில் இருந்து நீக்குங்கள் என்றார்.

இதற்குப் பதிலளித்த வேலுக்குமார் எம்.பி. ,

எனக்கு சபாநாயகரிடம் முன்வைக்கும் நிலையியல் கட்டளையே உள்ளது. அதன்படி அதனை அவரிடம் முன்வைக்கின்றேன் என்றார்.

இதனையடுத்து எழுந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,அனைவருக்கும் கருத்துச் சுதந்திரம் உள்ளது. ஒரு தரப்பு சார்ந்த கருத்துக்களை கூறுகையில் அதனை பெரும்பான்மை சமூகம் விரும்பவில்லை என்றால் அதனை தடுக்க முயலக் கூடாது என்பதுடன், அவரை மௌனிக்கச் செய்யவும் வேண்டாம் என்றார்.

இதனையடுத்து அரச தரப்பின் பின் வரிசை எம்.பிக்கள் பலரும் எழுந்து , இந்த பாராளுமன்றத்தில் சிறப்புரிமைகளை இவ்வாறான விடயங்களுக்காக பயன்படுத்த முடியாது. பயங்கரவாத தலைவரை தேசியத் தலைவராக எந்தப் பாராளுமன்றத்திலாவது கூறுவார்களா? அதற்கு அனுமதி வழங்க வேண்டாம். இவர்கள் பிரபாகரனை நெல்சன் மண்டேலா, மகாத்மா காந்திக்கு சமாந்தரமாக கூற முற்படுகின்றனர். ஆனால் அவர் பயங்கரவாத தலைவரே என்றார்.

இதற்கு பதிலளித்த வேலுகுமார் எம்.பி., இதனை ஹன்சாட்டில் இருந்து நீக்குவது தொடர்பான கோரிக்கை தொடர்பாக சபாநாயகருக்கு அறிவிக்கின்றேன் என்றார்.

இதனையடுத்து தனது பேச்சை தொடர்ந்த கஜேந்திரன் எம்.பி. இந்தப் பிரச்சினையை எழுப்பிய அம்மணிக்கு ஒன்றைக் கூறிக் கொள்கின்றேன். அதாவது நாடு அழிவுப் பாதையில் செல்கின்றது. வீடு கொளுத்துகிற ராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கின்ற மந்திரிகளாக நீங்கள் இருக்க வேண்டாம் என்று கேட்கின்றேன் என்றார்.

## இலங்கை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது. 31 முன்னுரிமைக்குரிய நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.

மனித உரிமை செயற்பாட்டாளர்களை கண்காணிக்கும் நடவடிக்கையையும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதையும் பாதுகாப்பு படையினர் அதிகரித்துள்ளனர் என தெரிவித்துள்ள பிரிட்டன், கண்மூடித்தனமாக கைது செய்யும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

நபர்களை தீவிரவாதமயப்படுத்தலில் இருந்து மீட்பதற்காக கைது செய்து தடுத்துவைப்பதற்கான புதிய சட்டங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ள பிரிட்டன், இந்த நடைமுறை நீதித்துறையின் கண்காணிப்பின் கீழ் இடம்பெறவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. ஜனாதிபதி மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்கினார்.

காணாமல்போனவர்கள் அலுவலகம் போன்றவற்றிற்கு தலைமை தாங்குவதற்கு சர்ச்சைக்குரிய நபரை நியமித்தார் எனவும் பிரிட்டன் தனது மனித உரிமை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## பெற்றோலியம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படவுள்ளது.

தேசிய பெற்றோலிய மற்றும் இயற்கை வாயு கம்பனியை நிறுவுவதற்காக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2011 தொடக்கம் 2013 வரைக்குமான காலப்பகுதியில் மன்னார் அகழி எம் 2 நிலப்பரப்பின் ஒரு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கமைய, நாட்டில் பெற்றோலிய மற்றும் இயற்கை வாயுப் படிமம் காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிரந்தர ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ருவிட்டர் பதிவில், இலங்கைத் தமிழ் மக்களுடன் நிரந்தர சமாதானத்தையும், அவர்களின் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் முழுக் குரலையும் தேடுவதில் தானும் இணைந்து கொள்வதாக லூ கூறினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் இராசமாணிக்கம் மற்றும் உலகளாவிய தமிழ் மன்றத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மேலும் அவர்கள் வெள்ளை மாளிகை உட்பட உயர்மட்ட அமெரிக்க அதிகாரிகளுடன் தொடர் சந்திப்புகளை நடத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மு.கா.எம்.பிக்கள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் அவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் காசிம், ஹாபிஸ் நஸீர் அஹ்மட் ஆகிய மூவரே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளனர். கட்சியின் தீர்மானத்தைப் புறக்கணித்து நடந்ததற்காக அவர்களிடம் விளக்கம் கோரப்படவுள்ளதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

## குண்டுவீச ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய புலனாய்வு பிரிவு பொலிஸார், வீட்டை சேதப்படுத்தியவர்கள் இருவரை மானிப்பாயில் வைத்து கைது செய்ததுடன், அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மற்றும் வாள் ஒன்றையும் கைப்பற்றினர். காணிப்பிரச்சினை ஒன்றில் அயல் வீட்டுகாரருடன் ஏற்பட்ட மோதல் சம்பவமே வீட்டின் மீதான தாக்குதலுக்கா காரணம் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்தது.

மானிப்பாயை சேர்ந்த சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் ஒருவர் கூலிப்படைக்கு 3இலட்சம் ரூபா பணம் கொடுத்து வீட்டிற்கு பெற்றோல் குண்டு அடித்து வீட்டையும் அடித்து நொருக்குமாறு சொல்லியுள்ளமை விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸார் கூறினர். மானிப்பாயை சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு இவ்வாறு பணம் அனுப்பப்பட்டுள்ளது. அவா் தன்னுடன் வேறு சில கூலியாட்களையும் சோ்த்துக்கொண்டு இந்தத் தாக்குதலில் ஈடுபட்டார்.

இந்நிலையில் இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் தேடப்படுகின்றனர். அவர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கையினை யாழ்மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் சுன்னாகப் பொலிஸாரும் மேற்கொண்டு வருகிறார்கள் .

கைது செய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ச-75)

## கிண்ணியா ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சாக்கேணியில் நேற்று முன்தினம் இந்த படகுப் பாதை நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் 4 சிறுவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்ததுடன் 20க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் குறித்து முன்னெடுத்த விசாரணைகளையடுத்து கிண்ணயா பொலிஸாரால் ஒருவரும் திருகோணமலை பொலிஸாரால் இரண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை தடுத்து வைத்துள்ளதோடு நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## 65 வயது ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க சேவைகள்,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலைவிவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், அரசாங்க ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 65 ஆக நிர்ணயிப்பதற்கு அனைத்து தொழிற்சங்கங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டே தீர்மானம் எடுக்கப்பட்டது. அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 65 என்பதை அரசு கண்டிப்பாக்கவில்லை. எனவே அரச ஊழியர்கள் தமது 55 வயதை நிறைவு செய்த பின்னர் விரும்பிய முறையில் ஓய்வுபெறும் காலத்தை தீர்மானித்துக் கொள்ள முடியும் என்றார்.

## 20 வயதுக்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். எதிர்வரும் சில தினங்களில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.பூஸ்டர் தடுப்பூசி ஏற்கனவே 3 லட்சத்து 80 ஆயிரத்து 213 பேருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதில் சுகாதாரத் துறையினரும் அடங்குகின்றனர். தற்போது மொத்த சனத்தொகையில் 73 சதவீதம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் நாள்களில் 75 சதவீத இலக்கை எட்டுவதற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இது முழு நாட்டு மக்களுக்கும் கிடைத்துள்ள குறிப்பிடத்தக்க வெற்றியாகும். இதுவரை ஏறக்குறைய 1.1 மில்லியன் மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இலக்கை மேலும் 2 இலட்சமாக அதிகரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்றார்.

## திமிர் பிடித்த ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படுமெனவும் சுகாதார தொழில்நுட்ப வல்லுனர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

சுகாதார நிபுணர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்க்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். எனவே சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு தேவையான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்தால் இவ்வாறான போராட்டங்களை தடுத்திருக்கலாம்.

திமிர் பிடித்த அமைச்சர்களினாலும் திறமையற்ற அதிகாரிகளினாலும் மக்கள் அவதியுறுகின்றனர். எனவே விருப்பமில்லாவிட்டாலும் வேலை நிறுத்தம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

இதுவொரு அடையாள வேலைநிறுத்தமாகும். இவற்றை 48 மணி நேரத்தில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## பிரபாகரனின் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைப் பொருளுடன் தொடர்புபடுத்தி கூறுவது வேடிக்கையானது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற புத்தசாசன ,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,தேசிய மரபுரிமைகள் ,அருங்கலைகள்,மற்றும் கிராமிய கலை நுட்ப ,மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அரசாங்க சேவைகள்,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலைவிவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

தமிழர்களை பொறுத்தவரையில் இந்த மாதம் மிகவும் முக்கியமான, புனிதமான மாதமாகும். சுதந்திர காலம் தொடக்கம் தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு மேற்கொண்ட இனப் படுகொலைகளுக்கு எதிராக அதனை தடுத்து நிறுத்துவதற்காக போராடி தமிழ் மக்களின் தேசம் அதன் இறைமை மற்றும் அங்கீகரிக்கும் அடிப்படையில் தீர்வை எட்ட வேண்டும் என்றும், அதன்படி இந்தத் தீவின் அனைத்து இன மக்களும் மகிழ்ச்சியாக வாழக் கூடிய நிலையை எட்ட முடியும் என்ற எதிர்பார்ப்போடு தமிழ் மக்களுக்காக போராடி உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூரும் மாதமாக இந்த மாதம் இருக்கின்றது.

இந்த அவையில் மாவீரர்களுக்காக தலைசாய்த்து வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வேளை, வருகின்ற 27 ஆம் திகதி தமிழர் தாயகமெங்கும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு கடந்த இரண்டு தசாப்தங்களாக நடத்தப்பட்டு வரும் நிலையில், அரசாங்கம் தமது காவல்துறை மற்றும் நீதித்துறையை பயன்படுத்தி அதற்கு தடைகளை ஏற்படுத்துகின்றனர். காவல்துறையினர் தவறாக நீதிமன்றங்களை வழிநடத்துவதும், தவறுகள் என்று தெரிந்தும் அரசாங்கத்தின் நெருக்குதல்களால் நீதிமன்ற தடைகள் விதிக்கப்படுவதும் இடம்பெறுகிறது. நினைவேந்தல் என்பது அடிப்படை உரிமையாகும். கடந்த 70 வருடங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்கள் எங்கள் மக்கள் மீதும், தேசத்தின் மீதும் அடக்குமுறைகளை கையாண்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை வடக்கில் மாவீரர் தின நிகழ்வுகளுக்காக சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தபோது இராணுவத்தினர் அவற்றுக்கு இடையூறாக அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர். இந்த சபையில் இப்போது ஜனாதிபதியின் அண்ணனின் மகன் நாமல் ராஜபக்ஷ இருக்கின்றார். அவருடாக ஜனாதிபதிக்கு ஒரு விடயத்தை தெரிவிக்க விரும்புகின்றேன்.

எங்களது தேசத்தையும், தேசத்தின் இறைமையையும் அங்கீகரிக்கின்ற பாதையில் முடிவுகளை எடுப்பதற்கு முயற்சி செய்யுங்கள். மாறாக கடந்த காலங்களில் எங்கள் மீது மேற்கொண்ட இனப் படுகொலையை மூடி மறைக்கும் வகையில் அடக்குமுறைகளை பிரயோகிக்கின்ற வகையில், உங்களுடைய அணுகுமுறைகளை தொடர்ந்தும் கையாளாதீர்கள். இந்த அணுகுமுறைகளை மாற்றினால் இந்தத் தீவில் நிரந்தர அமைதியை பேணி, இந்தத் தேசத்தை ஐக்கியமாக கட்டியெழுப்பக் கூடிய சூழலையும் உருவாக்க முடியும்.

இதேவேளை இந்த அவையில் நேற்று, (நேற்றுமுன் தினம்) சிறீதரன் உரையாற்றும் போது வடக்கில் போதைப் பொருள் பாவனை தொடர்பில் கூறினார். அந்த உண்மையை சகித்துக்கொள்ள முடியாத, துணை இராணுவக் குழுவின் தலைவரும், இந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருக்கின்ற டக்ளஸ் தேவானந்தா பொய்யான கருத்தை முன்வைத்துள்ளார்.

எங்களது தேசத்திற்காக 30 ஆண்டுகள் போராடியிருந்த எங்களின் தேசியத் தலைவர் பிரபாகரன் காலத்தில் போதைப் பொருள் வியாபாரம் நடந்ததாக அப்பட்டமான பொய்யை அவர் அங்கே கூறியுள்ளார். அந்தக் கருத்தை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். முற்றாக மறுக்கின்றேன். யுத்தத்தை களத்தில் தலைமைதாங்கி நடத்திய இரண்டு தளபதிகளான சரத் பொன்சேகா மற்றும் கமல் குணரட்ன ஆகியோர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளின் தலைவருடைய ஒழுக்கம் தொடர்பில் தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். அதில் கமல் குணரட்ன, தாம் பிரபாகரனுடன் தொடர்புடைய பத்தாயிரம் புகைப்படங்களை பரிசோதனை செய்ததாகவும், அதில் எந்தவொரு இடத்திலும் ஒழுக்கக் கேடுகளையும் அவதானிக்கவில்லை என்றும் கருத்தை பதிவு செய்துள்ளார்.

உங்களுக்கு அடிமையாக இருக்கின்ற டக்ளஸ் தேவானந்தாவை அதனை வாசிக்குமாறு கூறுங்கள் என்றார்.

# கிளிநொச்சி டிப்போ சந்தியில் சுற்றுவட்டப் பாதையை உடனடியாக அமைக்க உத்தரவு

## -ஸ்ரீதரன் எம்.பியின் கோரிக்கையை உடன் நிறைவேற்ற பிரதமர் பணிப்பு-



பா. கிருபாகரன் -
ந. ஜெயகாந்தன்

கிளிநொச்சி டிப்போ சந்தியில் சுற்றுவட்டப்பாதை அமைக்கும் ஸ்ரீதரன் எம்.பியின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுமாறு நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச உத்தரவிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற புத்தசாசன ,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுஇதேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் ,மற்றும் கிராமிய கலை நுட்ப, மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு,அரசாங்க சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுஇமாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய ஸ்ரீதரன் எம்.பி. டிப்போ சந்தியில் சுற்றுவட்ட சந்தியை அமைத்து சைகை விளக்குகளை பொருத்துமாறு தான் பலதடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனவும் அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைத்தலைவருக்கு கடிதம் எழுதியும் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை எனவும் தயவு செய்து முதலில் அதனை நிறைவேற்றுங்கள் எனவும் சபையில் இருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது எழுந்த நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கிளிநொச்சி பிரதேசத்தின் போக்குவரத்து பிரச்சி னைகளை உடனடியாக தீர்க்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச,எனக்கு இப்போது பணிப்புரை விடுத்துள்ளார்,உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

அதேவேளை வடக்கில் விபத்துக்கள் இடம்பெறுவதாக கூறப்படும் நிலையில், இராணுவ வாகனங்களால் விபத்துக்கள் ஏற்படுவதாக மாத்திரம் தகவல்களை வெளியிடவேண்டாம். தென்பகுதியிலும் இராணுவ பொலிஸ் வாகனங்கள் மோதி உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. எனவே சர்வதேசத்துக்காக தவறான தகவல்களை வழங்க வேண்டாம் .

இலங்கையில் நாள் ஒன்றுக்கு விபத்தினால் 8 பேர் மரணமடைகின்றனர் .வருடமொன்றுக்கு 27000 விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இவற்றில் 7000 விபத்துக்கு பாரதூரமானவையாகவுள்ளன.

இவ்வாறான விபத்துக்களைக்கட்டுப்படுத்த ஜனாதிபதியின் பணிப்புரையில் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இது 4 வருடங்களுக்குள் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

இது தொடர்பில் ஸ்ரீதரன் எம்.பி. கூறுகையில் உடனடியாகவே நடவடிக்கை எடுத்த பிரதமருக்கும் போக்குவரத்து அமைச்சருக்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன் என் றார்.

# பருத்தித்துறை நகர சபை அமர்வில் பங்கேற்ற உறுப்பினருக்கு கொரோனா

பருத்தித்துறை நகர சபை வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் பங்கேற்ற உறுப்பினர் ஒருவருக்கு கொவிட்-19 தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் வரவு செலவுத் திட்டம் தவிசாளரால் நேற்று முன்வைக்கப்பட்டது. வாக்கெடுப்புக்கு விடப்பட்டு ஒரு மேலதிக வாக்கினால் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 5 பேரும் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சுயேட்சை ஆகியவற்றின் உறுப்பினர் தலா ஒருவர் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் ஆறு பேரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவரும் எதிராக வாக்களித்தனர்.

அதனால் வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் சமநிலை காணப்பட்டதனால் உள்ளூராட்சி மன்றச் சட்டத்துக்கு அமைய தவிசாளர் தனது வாக்கை ஆதரவாக வாக்களித்து ஒரு மேலதி வாக்கினால் நிறைவேற்றப்பட்டது.

இந்த வாக்கெடுப்பின் போது கலந்துகொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர் உடல்நலக் குறைவுடன் காணப்பட்டுள்ளார்.

வாக்கெடுப்பின் பின்னர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குச் சென்று முன்னெடுத்த பரிசோதனையில் அவருக்கு கொவிட்-19 தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. (40)

# வடக்கு மாகாண ஆளுநரை எம்மால் கூட தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை

## -ஸ்ரீதரன் எம்.பி. பிரதமரிடம் முறைவீடு-



பா. கிருபாகரன் -
ந. ஜெயகாந்தன்

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுடன் எம்.பி.க்களான எம்மால் கூட தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லையென பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் யாழ் மாவட்ட எம்.பி.யான ஸ்ரீதரன் முறையிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற புத்தசாசன இசமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,தேசிய மரபுரிமைகள் ,அருங்கலைகள்,மற்றும் கிராமிய கலை நுட்ப ,மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அரசாங்க சேவைகள்,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலைவிவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு முறையிட்ட அவர் மேலும் கூறுகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் சில பிரச்சினைகளைப் பேசுவதற்காக வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநரான ஜீவன் தியாகராஜாவுடன் பேசுவதற்காக பலதடவைகள் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயற்சித்தேன். ஆனால் அவர் எனது அழைப்புக்களுக்கு பதிலளிக்கவில்லை.

வடக்கு மாகாணத்தின் ஆளுநர்களாக இருந்த திருமதி சார்ள்ஸ் மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர் நாம் எந்த வேளையில் தொலைபேசி அழைப்பு எடுத்தாலும் உடனடியாக பதில் வழங்குவார்கள்.

ஆனால் ஜீவன் தியாகராஜா எமது தொலைபேசி அழைப்புக்களுக்கு பதிலளிப்பதில்லை என்பதனை இங்குள்ள பிரதமரின் கவனத்துக்கு கொண்டு வருகின்றேன் என்றார்.

# மாகாண சபைகளை இல்லாது ஒழியுங்கள்

## -அது பெரும் சுமை என்கிறார் அதாவுல்லா எம்.பி.-

பா. கிருபாகரன் -
ந. ஜெயகாந்தன்



ஒரே நாடு, ஒரே சட்டம் என அரசு அறிவித்துள்ளநிலையில் மாகாண சபைகளில் 9 சட்டங்கள் ,மத்திய அரசில் ஒரு சட்டம் என 10 சட்டங்கள் இருக்கின்றன. எனவே மாகாண சபைகளை இல்லாதொழிக்க வேண்டும். அத்துடன் இலங்கை - இந்தியா ஒப்பந்தம் ஊடாக நாட்டுக்கு வழங்கப்பட்ட மாகாண சபைகள் என்ற சுமையை தாங்கிக்கொண்டு அதற்கு தொடர்ந்து செலவிட்டுக்கொண்டிருக்க முடியாது என மக்கள் காங்கிரஸ் தலைவரும் அரசதரப்பு எம்.பி.யுமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற புத்தசாசன இசமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தேசிய மரபுரிமைகள்,அருங்கலைகள் ,மற்றும் கிராமிய கலைநுட்ப ,மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அரசாங்க சேவைகள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், சிங்கள ,தமிழ்,முஸ்லிம் மக்களின் உரிமைகள் தொடர்பிலும் அதிகாரப்பகிர்வு தொடர்பிலும் பிரித்தானிய காலம் முதல் பல அரசியலமைப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன.இதுவரை சிறிய நாட்டை 9 ஆக பிரித்துள்ளோம். தமிழ் மக்கள் தமது உரிமையை கோரிய போது 9 மாகாண சபைகளை அமைத்துள்ளோம்.இந்த ஒப்பந்தம் குறித்தும் மாகாண சபைக்களுக்கு ஒதுக்கும் நிதி பற்றியும் பேசுகிறோம். மாகாண சபை முறை எம்மீது ஏற்றப்பட்ட சுமையாகும்.அதனை ஒழிக்க வேண்டும்.

ஆனால் தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் தமது உரிமைகளை கோருகின்றனர். அவர்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியுமாக இருந்தால் அனைவரும் ஒன்றாக வாழக்கூடிய அரசியலமைப்பொன்றை அமைக்க முடியுமாக இருந்தால் இந்த சுமையாக உள்ள மாகாண சபை முறை எமக்கு எதற்கு வேண்டும்?ஏன் இதனை வைத்திருக்க வேண்டும்?ஏன் இதற்கு பணம் செலவிட வேண்டும்?

ஒரு நாடு ஒரு சட்டம் என்கிறோம். ஆனால் 10 சட்டங்கள் இருக்கின்றன.

9 மாகாணங்களில் 9 சட்டம் மற்றும் மத்திய அரசின் சட்டம் என 10 சட்டங்கள் இருக்கின்றன.எனவே இலங்கை-இந்தியா ஒப்பந்தம் ஊடாக நாட்டுக்கு வழங்கப்பட்ட மாகாண சபைகள் என்ற சுமையை இல்லாதொழிக்க வேண்டும் என்றார்.

# மனோ கணேசன் வீடு திரும்பினார்

கோவிட் தொற்றினால் சுகவீனமுற்று கடந்த சுமார் பத்து நாட்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன் பூரண சுகம் பெற்ற நிலையில் நேற்று வீடு திரும்பினார்.

ஊடகங்களுக்கு இது பற்றி கருத்து கூறிய மனோ எம்பி, சுகவீனமுற்ற வேளையில் எனக்கு ஆறுதல்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்து, மத வழிபாடுகளிலும் ஈடுபட்டு, அன்பையும், நம்பிக்கையையும் நேரடியாகவும், ஊடகங்கள், தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் தெரிவித்த கட்சி, கூட்டணி, நண்பர்கள், ஆதரவாளர்கள், அரசியல் பிரமுகர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள்,உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழும் அன்புள்ளங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

# மலர் கண்காட்சியில் பங்கேற்பு; இந்தியத் தூதரகம் விளக்கம்



யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள சங்கிலியன் பூங்காவில் 20 ஆம் திகதி நடைபெற்ற பசுமைக் கண்காட்சி மற்றும் மரக்கன்றுகள் விநியோக நிகழ்வு தொடர்பான பல தவறான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தமை கவனத்திற்கு வந்துள்ளதாக யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் அழைப்பின் பேரில் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

அத்தகைய பங்கேற்பு அமைப்பாளர்கள் அல்லது அவர்களின் செயல்களுடன் உத்தியோகபூர்வ நிகழ்ச்சிக்கு வெளியே எந்த வகையிலும் சம்பந்தப்படவில்லை.

இது தொடர்பில் அவருக்கு எந்த முன் அறிவித்தலும் வழங்கப்படவில்லை எனவும் அறியத்தரப்படுகிறது எனவும் இந்திய துணைத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

# கிண்ணியா விபத்து; 6 பேர் சிகிச்சை முடித்து வீடு திரும்பினர்

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற படகு விபத்தின் போது கிண்ணியா தளவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஆறு பேர் நேற்று புதன்கிழமை மதியம் சிகிச்சை முடித்து வீடு திரும்பியுள்ளதாக வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி டொக்டர் ஜிப்ரி தெரிவித்தார்.

இதில் இரு சிறுவர்களும் நான்கு ஆண்களும் அடங்குவர்படகு விபத்தில் ஆறு பேர் உயிரிழந்த நிலையில் 27 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஒருவர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கும் மற்றுமொருவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கும் அனுப்பப்பட்டிருந்தனர் தற்போது ஏனையோர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவித்தார். நேற்றைய தினம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்,கிண்ணியா தளவைத்தியசாலைக்கு சென்று படகு விபத்தில் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவர்களை நலன் விசாரித்தார்.

# வடக்கில் ஆக்கிரமிப்புகளையோ பலவந்த குடியேற்றங்களையோ முன்னெடுக்கவில்லை

## -இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க-

பா.கிருபாகரன்
ந.ஜெயகாந்தன்

வடக்கில் நாங்கள் ஆக்கிரமிப்புகளையோ பலவந்தமான குடியேற்றங்களையோ தாம் எந்த வகையிலும் முன்னெடுக்கவில்லை என்றும் பாதுகாக்க வேண்டியவற்றை பாதுகாக்கும் நடவடிக்கையிலேயே ஈடுபடுகின்றோம் என்றும் தேசிய மரபுரிமைகள்,அருங்கலைகள் மற்றும் கிராமிய கலைநுட்ப,மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற புத்தசாசன,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,தேசிய மரபுரிமைகள்,அருங்கலைகள் இமற்றும் கிராமிய கலைநுட்ப ,மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அரசாங்க சேவைகள்இமாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலைவிவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு



தெரிவித்தார். அதன்போது அவர் கூறுகையில், வடக்கை சேர்ந்த எம்.பிக்கள் அடிக்கடி முன்வைக்கும் குற்றச்சாட்டாக தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்களை பௌத்த மயமாக்க முயற்சிப்பதாக கூறுகின்றனர். நாங்கள் பாதுகாக்க வேண்டியதை பாதுகாக்க நாங்கள் தயார். அதனை தமிழ், சிங்கள, முஸ்லிம் என்றோ அல்லது இந்து கிறிஸ்தவர், இஸ்லாம் என்றோ பாதுகாக்கவில்லை. இலங்கை என்ற ரீதியிலேயே அதனை செய்கின்றோம்.

ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டு பலவந்தமாக மக்களை குடியேற்றவோ, பலவந்தமாக விகாரைகளை அமைக்கவோ முயற்சிக்கவில்லை. நாங்கள் கடந்தகால மரபுரிமைகள் மீள தேசத்திற்கு வழங்குவதற்கான பணியே தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனை தவிர தமிழ் மக்களின் வாழ்விடங்களையோ அல்லது விவசாய இடங்களை பலவந்தமாக பெற்றுக்கொள்ளவோ எங்களுக்கு அவசியமில்லை. அடிக்கடி இது தொடர்பாக கருத்து கூறுகின்றனர். இதற்கு நிறுத்தம் இருக்க வேண்டும். நாங்கள் நட்புறவுடனேயே கரத்தை நீட்டுகின்றோம்.

இதேவேளை நாங்கள் புதிய வேலைத்திட்டங்களை தேசிய மரபுரிமைகள் ,அருங்கலைகள் ,மற்றும் கலைநுட்பங்களுக்காக முன்னெடுக்கவுள்ளோம். எமது வடக்கு, கிழக்கில் எம்.பிக்கள் அறிந்துகொள்ள வேண்டும். அந்த வேலைத்திட்டங்களுக்கு அமைய கலைகள் தொடர்பாக கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள டவர் மண்டபங்களை போன்ற மண்டபங்களை அங்கும் அமைக்க நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# சீரற்ற காலநிலையால் காரைநகரில் 632 பேர் பாதிப்பு

தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 183 குடும்பங்களைச் சேர்ந்த 632 நபர்கள் காரைநகரில் பாதிக்கப்பட்டுள்ளனரென மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. தற்போதைய காலநிலை தொடர்பாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு நேற்று மாலை நான்கு மணிவரையான நிலைவரம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல் பெய்தமழை மற்றும் அதிக காற்று காரணமாக 183 குடும்பங்களைச் சேர்ந்த 632 நபர்கள் காரைநகரில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் இரண்டு குடும்பத்தினர் தற்காலிகமாக உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனரென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-75,40)

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
வியாழக்கிழமை 25 நவம்பர் 2021 Thursday 25th November 2021

## விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த நேர்மையான நடவடிக்கைகள் தேவை

நாட்டில் மரக்கறிகள் உட்பட உணவுப் பொருட்களின் விலைகள் மட்டுமன்றி ஏனைய பாவனைப் பொருட்களின் விலைகளும் தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றது. இதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றபோதும் இப்பிரச்சினையை எதிர்கொண்டு, பொதுமக்களின் நலன் கருதி விலைவாசி அதிகரிப்பை கட்டுப்படுத்த நேர்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பொருட்களின் விலைகளும் சேவைகளுக்கான கட்டணங்களும் வானைத்தொடும் அளவிற்கு உயர்ந்து சென்றுகொண்டிருக்கின்றது. பொருட்களின் விலைகள் சாதாரண மக்களின் குறிப்பாக வறிய , நடுத்தர மக்களிற்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து உயர்ந்துவரும் விலைகளின் சுமையிலிருந்து வெளியேறுவதற்கு வழிதெரியாமல் மக்கள் விழிபிதுங்குகின்றனர். அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தாத வரை, அது சகலவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்தி பற்றாக்குறையான வளங்களை மென்மேலும் வரட்சியடையச் செய்துகொண்டே இருக்கும். தானியங்கள், பருப்பு வகைகள், மா, சமையல் எண்ணெய்கள் மற்றும் அனைத்து அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் உயர்ந்து சாதாரண மக்களின் வாழ்க்கையை அச்சுறுத்துகின்றது.

நாட்டின் பல பொருளாதார நிலையங்களில் மரக்கறிகளின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. போஞ்சி , தக்காளி, மிளகாய் உள்ளிட்ட மரக்கறிகள் முன்னரை விட தற்போது அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.மரக்கறிகளின் விலை அதிகரிப்பு டிசம்பர் மூன்றாம் வாரம் வரை தொடரலாம் என ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.இதேவேளை, நிலவும் பிரச்சினைகளால் எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மரக்கறி விலைகள் கட்டுப்படியாகாத அளவுக்கு உயரக்கூடும் என மலையக மரக்கறிச் செய்கையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.வரலாறு காணாத வகையில் இன்றைய நாட்களில் அதிக விலைக்கு மரக்கறிகள் விற்பனை செய்யப்படுவதாக பேலியகொடமெனிங் சந்தை வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

விலை உயர்வு என்பது பொருளாதார நிகழ்வொன்றாகும். இது நுகர்வோருக்கு விரும்பத்தகாத விடயம் . எனவே விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த வேண்டும். விலை உயர்வால் மக்களின் கொள்வனவு சக்தி பாதிக்கப்படுவதுடன், அன்றாட நுகர்வுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்களின் விலைகள் உயர்ந்து வருவது மட்டுமின்றி, சமையல் எரிவாயு போன்றவற்றின் விலையும் தொடர்ந்து உயர்ந்து வருவது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. அதேசமயம் பெற்றோலியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடுமென்பதாலும் மக்கள் மத்தியில் தொடர்ந்து அச்சநிலை காணப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் பெரும் கவலையையும் விசனத்தையும் வெளிப்படுத்துவதையும் காணமுடியும். காய்கறி வகைகள், சமையல் வாயு விலை உயர்வு காரணமாக அனைத்து உணவுப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கட்டணங்களும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.இது மக்களை குறிப்பாக வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களை மோசமாக பாதிக்கிறது. விலைவாசி உயர்வை எதிர்கொள்வது ஆட்சியாளர்களின் கடமை என்பதால், கட்டுப்பாடற்ற வர்த்தகர்களால் நுகர்வோர்கள் கொள்ளையடிக்கப்படாமல் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு.

அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.சடுதியான மற்றும் தொடர்ச்சியான விலைவாசி அதிகரிப்பு வறுமைக்கோட்டின்கீழ் வாழ்வோருக்கே மிகப் பாரிய பிரச்சினை. எனவே,சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதன் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தி பொதுமக்களுக்கு ஓரளவேனும் நிவாரணம் அளிக்க முன்வர வேண்டும். ஆனால்,அரசாங்கம் தலையிட்டு விலைவாசியை கட்டுப்படுத்தும் சாத்தியம் அருகியே காணப்படுகிறது . இது ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரலில் இல்லாததால், அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்களின் விலைவாசி உயர்வு தொடர்ந்து மிக அதிகமாக உயர்ந்து செல்கிறது. அதனால் விலைவாசி உயர்வு மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கிறது. தேர்தல் நெருங்கும் போது, ஆளும்தரப்பு பொருட்களின் விலைகளை குறைப்பதும் எதிரணி விலைவாசி அதிகரிக்கும் போக்கை கட்டுப்படுத்தப்போவதாக உறுதியளிப்பதும் வழமையாக இருந்துவருகிறது.

அன்றாட பாவனைப் பொருட்களின் விலை அதிகரிப்பு , மக்களின் கொள்வனவு சக்தியை பாதித்து, அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல், சாமானியர்களின் வாழ்க்கையை மோசமாகப் பாதிக்கிறது. விலை உயர்வு விரும்பத்தகாத பொருளாதார நிகழ்வாகும். கட்டுப்பாடின்றி பொருட்களின் விலைகள் அதிகரிப்பதற்கு அனுமதித்தால் அது அனைத்து மக்களின் வாழ்க்கையையும் பாதிக்கும். விலைவாசி உயர்வால் மக்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்வது அதிகாரிகளின் பொறுப்பும் கடமையுமாகும்.எனவே நுகர்வோர் நலன் கருதி விலைவாசி உயர்வுப் போக்கை ஆட்சியாளர்கள் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக விலை உயர்வை கண்டுகொள்ளாமல் இருப்பது போல் தெரிகிறது.ஏழைகள் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் பிரிவினரின் வாழ்வு பெரிதும் பாதிக்கப்படுகிறது. விலை அதிகரிப்பால் அதிகம் பாதிக்கப்படுவது அவர்களே. சாதாரண மக்களைக் காப்பாற்ற அரசு முன்வர வேண்டும். நுகர்வோரின் நலனுக்காக விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் ஆட்சியாளர்கள் விலை நிர்ணயம் மற்றும் முடிவுகளில் தலையிட்டு கட்டுப்படுத்துவதில் ஆர்வம் காட்டவில்லையென்றே தோன்றுகிறது. அனைவரையும் குறிப்பாக வறிய மற்றும் நடுத்தர வருமானம் பெறும் மக்களை பாதிக்கும் பொருட்களின் விலை விஷம்போல் உயர்ந்து சென்றாலும் கொரோனாவை காரணம் காட்டி இது தொடர்பாக அதிகளவுக்கு கவலைப்படாத போக்கே தொடர்வதாகத் தென்படுகிறது .

# பயங்கரவாத எதிர்ப்பென்ற பெயரில் மனித உரிமைகளை கட்டுப்படுத்தும் அடக்குமுறை சட்டங்களை இயற்றும் நாடுகள்



அம்பிகா சற்குணநாதன்

பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் மனித உரிமைகளை கட்டுப்படுத்தும் அடக்குமுறை சட்டங்களை நாடுகள் இயற்றுகின்றன. இந்தச் சட்டங்கள் எம்மைப் பாதுகாப்பான தாக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆயினும்கூட, தேசிய பாதுகாப்பை அதிகரிப்பது என்ற கூற்றுக்கு மாறாக, இலங்கையில் தமிழர்கள் மற்றும் சமீபகாலமாக முஸ்லிம்கள் போன்ற குறிப்பிட்ட சில சமூகங்களை இலக்குவைத்து பாரபட்சமாக , அச்சுறுத்தலென உருவகப்படுத்தி மற்றும் ஓரங்கட்டுவதற்கான பல பயங்கரவாத எதிர்ப்பு முன்முயற்சி போக்கானது சமூக ஒற்றுமையை சிதைத்து சமூக ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கியுள்ளது. மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் அரச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளில் காணக்கூடிய அரிமானம் ஆவணப்படுத்தப்பட்டாலும், அதே விளைவைக் கொண்ட நயவஞ்சக அரிமானங்கள் பெரும்பாலும் கவனிக்கப்படாமலும் ஆவணப்படுத்தப்படாமலும் போய்விட்டன.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் போது பயங்கரவாத எதிர்ப்பு விவகாரங்கள் தொடர்பான ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் பியொன்னுலா நிக் அலோசின் (Fionnuala Ni Aolain) சமீபத்திய சஞ்சிகையொன்றிலான கட்டுரையில், உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பிற்குள் இந்த செயல்முறையின் படிமுறையான வளர்ச்சியை உன்னிப்பான முறையில் ஆவணப்படுத்தியுள்ளார். உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பிற்குள் விதிமுறைகளை உருவாக்கும் செயல்முறையானது அதிகளவிற்கு மென்மையான சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். உதாரணமாக செயலணி மற்றும் நடைமுறைகள் தொடர்பான நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் வழிகாட்டல்கள் ,தரங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக்கொண்டது என்பதை நிக் அலோசின் விளக்குகிறார். ஆயினும் அவை அமுல்படுத்தக்கூடிய உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை தோற்றுவிக்கவில்லை. ஆயினும், சில சட்ட விளைவுகளை உருவாக்குகின்றன. இந்த ‘மனித உரிமைகள் குறைபாடுள்ள’ மென்மையான சட்டங்கள் அதன்பிறகு, மனித உரிமைகள் தரநிலைகளின் பயன்பாடு மற்றும் தேசிய அளவில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்வதைத் தவிர்ப்பதற்காக / மேற்பார்வை / தவிர்க்க நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இலங்கையில் இந்த செயல்முறையின் பரிணாமத்தை விளக்குவதற்கு நான் நிக் அலோசினின் ஆய்வு கட்டமைப்பைப் பயன்படுத்துகிறேன்.

நாம் பார்ப்பதெல்லாம் பயங்கரம், பயங்கரம், பயங்கரம் : இது ஒன்றும் புதிதல்ல, இது ஒரு தொடர்ச்சி.

கடந்த காலங்களில், தமிழர்களும் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம்களும் பாதுகாப்பில் வைக்கப்பட்டு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்களாக கருதப்பட்டனர். வடக்கு போன்ற தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் இராணுவமயமாக்கப்பட்டதை இதற்குக் காரணமாகக் கூறலாம். ராஜபக்ஷவின் முதலாவது ஆட்சியின் போது, தமிழ் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் கூட ஆபத்தானதாகக் கருதப்பட்டு, தற்போதைய ஜனாதிபதியாக இருக்கும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளரின் அனுமதியில் தங்கியிருந்தது . உதாரணமாக, 2011 ஜூன் 16 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டம் இராணுவ அதிகாரிகள் குழுவால் தாக்கப்பட்டது. தாக்குதல் தொடர்பான செய்திகளுக்குப் பதிலளிக்கும் வகையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமது கட்சி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உதவி கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடமிருந்து தனக்கு கடிதம் கிடைத்துள்ளதாக கோதாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏற்பாடுகளை அவர் செய்துகொண்டிருந்த வேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரின் அரசாங்கத்துடனான ஒப்பந்தத்தை சீர்குலைக்க முற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று தேசிய நல்லிணக்க செயல்முறையை தடம்புரளும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் ‘உத்தியோகப்பற்றற்ற’ கூட்டமொன்றை நடத்தியது.

அச்சுறுத்தல்கள் பற்றிய அரசாங்கத்தின் கருத்து வேறுபாடு மற்றும் விமர்சனங்களை உள்ளடக்கியது. இது தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவால் (இனிமேல் துறைசார் மேற்பார்வைக் குழு), ‘பாதுகாப்புக் கண்ணோட்டத்தில், அரசுக்கு எதிரான தகவல் மற்றும் செய்திகள் பரவுவதைத் தடுப்பது முக்கியம்’என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

‘பயங்கரவாத தடைச்சட்டமே சர்வதேச தரத்தை கடைப்பிடிக்காத போது, சர்வதேச தரநிலைகள் பின்பற்றப்படுவதை வழக்கறிஞர்கள் எப்படி உறுதி செய்ய முடியும் என்ற கேள்வி எஞ்சியிருக்கிறது’

### உண்மைகளை மாற்றுவதற்கான நயவஞ்சகமான வழிமுறைகள்

மென் – சட்டத்தை உருவாக்கும் செயற்பாட்டில் உதவுவதற்காக உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பிற்குள் உருவாக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்கள் பொதுவான புரிதல்கள் மற்றும் சட்ட வரையறைகளை மீள வடிவமைத்து மீண்டும் உருவாக்கும் கதைகளை உருவாக்குவதன் ஓரங்கமாகும்.சட்ட வரையறைகள் இல்லாத கருத்துக்கள் உருவாக்கப்பட்டு, இந்த மாற்றப்பட்ட விதிமுறைகள் மற்றும் செயல்முறைகளின் அடிப்படையில், உரிமைகளை மீறும் தன்னிச்சையான மற்றும் அடக்குமுறை அரச நடவடிக்கைகள் இயல்பாக்கப்படுவதைப் போன்ற ஒரு நிகழ்வை இலங்கையிலும் காணலாம். ‘தகவல்கள் அல்லது கருத்துக்களை பரிமாறிக்கொள்ளுதல் , மற்றொரு பகுதி குறிப்பு , செய்தி நகல் மற்றும் அதே விதிகளின் தொடர்ச்சியான கோரிக்கைகள் என்பவை வெளிப்படைத்தன்மையற்ற மற்றும் அணுக முடியாத செயல்முறைகளில் வடிவமைக்கப்படுவதன்’மூலம் கதை கட்டியெழுப்பப்படுகிறது என்று நிக் அலோசின் விளக்குகிறார்.

சில நிறுவனங்களின் அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை அவதானிக்கும்போது இலங்கையில் இந்த மூலோபாயத்தின் பயன்பாடு தெளிவாகிறது. துறைசார் மேற்பார்வைக் குழு அத்தகைய நிறுவனங்களில் ஒன்றாகும். உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் பற்றிய தனது அறிக்கையின் மூலம் குழுவானது, நகல்படுத்தி ,அரங்கேற்றி இஸ்லாமிய வெறுப்புணர்வு செய்திகளை பெருக்கியது. ‘இஸ்லாமிய பயங்கரவாதம்’அல்லது ‘முஸ்லிம் பயங்கரவாதம்’போன்ற சொற்களை அது பயன்படுத்தாது என்று குழு அறிவித்த போதிலும், ‘இஸ்லாமிய விழுமியங்கள்,இலங்கைத் தேசியம், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கலாம்’ என்று அது வலியுறுத்துகிறது. இஸ்லாத்தில் இருந்து இலங்கைக்கு எப்பொழுதும் அச்சுறுத்தல் உள்ளது என்ற கருத்தை நிலைநாட்டும் இத்தகைய செய்திகள், எதிர்காலத்தில் அரசின் அடக்குமுறை சட்ட ரீதியான தலையீடுகளுக்கு களம் அமைக்கின்றன.எவ்வாறாயினும், பௌத்த பிக்குகள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டும் தற்போதைய ஆட்சியுடன் இணைந்த இனத்தை மையப்படுத்திய சிங்கள பௌத்த குழுக்களுக்கு ‘தீவிரவாத’முத்திரை சூட்டப்படவில்லை. ஒழுங்கமைக்கப்பட்ட முஸ்லிம்–விரோத வன்முறையை ‘இனவாத தன்மையான மோதல்கள் போன்ற சவாலான நிகழ்வுகள்’ என்று மட்டுமே துறைசார் மேற்பார்வைக் குழுவின் விவரிப்பதில் முஸ்லிம்–விரோத சார்பு தெளிவாகத் தெரிகிறது. எனவே தீவிரவாதம் என்பது அரசியல் தேவைகளுக்கு ஏற்ப அரசு நிறுவனங்களால் அகநிலையாக விளக்கப்படுகிறது.

குழுவின் கூற்றுப்படி, சிவில்



சமூகமும்கூட ‘பயங்கரவாத நிதியுதவி மூலம் கட்டுப்படுத்தப்படுவதன் மூலம்’ தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறமுடியும். பல நாடுகளைப் போலவே, இலங்கையிலும் பயங்கரவாத நிதியுதவி சட்டம் சிவில் சமூகத்திற்கு எதிராக ஆயுதமாக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில், இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவின் உத்தரவின் பேரில், பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பல சிவில் சமூக அமைப்புகளை விசாரணைக்காக கொழும்புக்கு வரவழைத்தது. இந்த நிதி பயங்கரவாத குழுக்களுடன் தொடர்புடைய ஆதாரங்களில் இருந்து வந்ததாக சந்தேகிக்கப்படுகிறது. இன்றுவரை, அந்த அமைப்புகளின் தவறான செயல்களுக்கு எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு என்பது பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் அடக்குமுறை நடவடிக்கைகளை நியாயப்படுத்த தற்போதைய ஆட்சியின் கதை கட்டமைப்பு செயற்பாட்டில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்த மற்றொரு நிறுவனமாகும். ஆணைக்குழுவின் முன் ஆஜராகுமாறு அழைக்கப்பட்ட சாட்சிகள், பாதுகாப்பு இயந்திரத்தின் அதிகாரங்களை விரிவுபடுத்துவதை நியாயப்படுத்த, அரசின் நிரந்தரமான பாதுகாப்பு அச்சுறுத்தல் கட்டுமானத்தை செயற்படுத்துவதற்கு ஆணைக்குழுவின் அதிகாரப்பூர்வமற்ற ஆணையாகத் தென்படுவதற்கு ஆதரவளித்தனர்.உதாரணமாக, பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண ஆணைக்குழுவிடம், பயங்கரவாதம் அல்லது மதத் தீவிரவாதம் நிறைந்த பகுதியில் செயல்படும் , நீதிபதியை விட பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கு தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். பாதுகாப்பற்ற நீதிபதி மீது அழுத்தம் கொடுக்கலாம். ஆனால், விசாரணையாளர்கள், பயிற்சி பெற்றவர்கள், ஆயுதம் ஏந்தியவர்கள் மற்றும் முகாம்களில் இருப்பதால் அவர்களுக்கு அத்தகைய கவலைகள் இல்லை என்று கூறியிருந்தார். தேசிய பாதுகாப்பின் பெயரால், அரச அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதற்கு முக்கியமான நீதித்துறையின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்று பொலிஸ் துறை வலியுறுத்துவது, நீதித்துறையின் அதிகாரங்களைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வெட்கக்கேடான முயற்சியாகவே கருதப்பட வேண்டும். ஆயினும்கூட, இது எந்த சீற்றத்தையும் ஏற்படுத்தவில்லை மற்றும் ஆணைக் குழு விசாரணைகள் மூலம் இயல்பாக்கப்பட்டது.

### சட்டத்தை உருவமற்றதாக்குதல் மற்றும் உரிய நடைமுறையை மறுத்தல்

வரலாற்று ரீதியாக, பயங்கரவாதத்தை எதிர்த்தல் என்பது சட்ட அடிப்படையின்றி பல முறைசாரா விதிகள் மற்றும் செயல்முறைகளை உருவாக்குவதை நியாயப்படுத்த பயன்படுத்தப்பட்டது. 30 வருட ஆயுத மோதலின் போது இராணுவம் மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்த விதிகளை நிர்வகித்தது. விதிகள் உள்ளூர் மக்களுக்குத் தெரியும், ஆனால் பெரும்பாலும் இந்தப் பகுதிகளுக்கு வெளியே வசிப்பவர்களுக்குத் தெரியாது. உதாரணமாக, நாட்டின் தெற்கிலிருந்து வடக்கே ஏ–9 நெடுஞ்சாலை மூடப்பட்டபோது, யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மக்கள் இராணுவத்தினர் மக்களைக் கண்காணிப்பதன் ஒரு பகுதியாக மோட்டார் சைக்கிள்களையும் தொலைபேசிகளையும் கூட இராணுவத்திடம் பதிவு செய்ய வேண்டியிருந்தது. 2009 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களாகக் கருதப்பட்டு, அரசாங்கத்தால் நடத்தப்படும் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டவர்கள், விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இராணுவ முகாம்களிலும் இராணுவம் நடத்தும் ‘சிவில் விவகார அலுவலகங்களிலும்’ ‘கையொப்பமிடும்’ செயல்முறைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த எழுதப்படாத சட்டங்கள் மற்றும் முறைசாரா செயல்முறைகள் சட்டங்களின் தோற்றப்பாட்டில் பயன்படுத்தப்பட்டன. முறைசாரா விதிகள் மற்றும் செயல்முறைகளின் உருவாக்கம் மற்றும் பயன்பாடு ராஜபக்ஷ ஆட்சிக்கு குறிப்பிட்டதல்ல என்றாலும், முதலாவது ராஜபக்ஷ ஆட்சியின் போது அவை முறையான அந்தஸ்தைப் பெறத் தொடங்கின.

இரண்டாவது ராஜபக்ஷ ஆட்சியின் போது, இந்த நடைமுறை வெவ்வேறு வடிவங்களில் இருந்தாலும் தொடர்கிறது.பயங்கரவாத தடைச் சட்டம் இயற்றப்பட்ட காலத்தில் இருந்து செயற்படுத்தப்பட்ட நன்கு ஆவணப்படுத்தப்பட்ட மீறல்கள் தவிர, காலப்போக்கில், உரிய செயல்முறை மறுப்பை அதிகப்படுத்தும் மேலதிக நடைமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளன. நீதிமன்றக் காவலில் வைக்கப்படும்

(06ஆம் பக்கம் பார்க்க...)



# யாழில் எந்நேரமும் டெங்கு தீவிரமாகப் பரவும் ஆபத்து

## -வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு-.

டெங்கு வைரஸ் தொற்றுள்ள ஒருவர் வெளி மாகாணங்களில் இருந்து இங்கு வருகை தந்தால் டெங்கு நோய் எந்த நேரத்திலும் யாழ்ப்பாணத்தில் தீவிரமாக பரவும் வாய்ப்புள்ளதென வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் கொரோனா தொற்று மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டத்துக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் நாங்கள் செய்த நுளம்புகள் சம்பந்தமான பூச்சியியல் ஆய்விலே டெங்கு நோயைப் பரப்புகின்ற நுளம்புகளும் குடம்பிகளும் அதிகமாக காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது.

டெங்கு வைரஸ் தொற்றுள்ள ஒருவர் வெளி மாகாணங்களில் இருந்து இங்கு வருகை தந்தால் டெங்கு நோய் எந்த நேரத்திலும் யாழ்ப்பாணத்தில் தீவிரமாக பரவும் வாய்ப்புள்ளது. டிசம்பர் 6 முதல் ஒரு வார காலப்பகுதியை யாழ் மாவட்டத்தில் டெங்கு நுளம்பு கட்டுப்பாடு வாரமாக பிரகடனப்படுத்தப்படுவதுடன் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை சிரமதானம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மட்ட கிராமிய மட்ட டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டங்களை நடத்தி,டெங்கு நுளம்பு கட்டுப்பாடு காலப்பகுதியில் பாடசாலைகள், பொது இடங்கள், அலுவலகங்கள், வீடுகளில் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (40 )

### மாணவர்களுக்கான பேருந்து சேவைகள் வேண்டும் எனக் கோரிக்கை

முல்லைத்தீவு -துணுக்காய் கல்வி வலயத்தின் மாணவர்களை பாடசாலைக்கும் பாடசாலையில் இருந்து வீட்டிற்கும் சென்று வருவதினை இலக்காகக் கொண்டு பேருந்து சேவைகள் இடம் பெற வேண்டும் என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் தெரிவித்தார்.

மாந்தை கிழக்கிற்கான மாணவர்கள் வீடு திரும்புவதற்கான பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை என்ற விடயம் தொடர்பாக அவர் தெரிவித்ததாவது. துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், துணுக்காய் கோட்டங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று திரும்பக் கூடிய வகையில் பேருந்து சேவைகள் இடம் பெற வேண்டும் என தொடர்ச்சியாக கூட்டங்களில் வலியுறுத்தி வருகின்றோம். பழையமுறிகண்டி, பாலைப்பாணி போன்ற பாடசாலைகளுக்கு பேருந்து சேவைகள் நடாத்துங்கள் என கேட்க முடியாது. இப்பாடசாலைகளில் மாணவர்கள் குறைவாக உள்ளனர். ஆனால் பேருந்துகள் பயணிக்கக் கூடிய பாடசாலைகளின் பெற்றோர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளோம். பேருந்து சேவைகள் மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று திரும்பி வரக் கூடிய நிலையில் இயங்க வேண்டும். துணுக்காய் கல்வி வலயத்தில் முழுமையான பேருந்து சேவைகள் மாணவர்களை இலக்காகக் கொண்டு இடம் பெறவில்லை என்ற நிலைமை உள்ளது எனவும் தெரிவித்தார். (27)

### பருத்தித்துறை நகரசபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நிறைவு

பருத்தித்துறை நகரசபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் சபைத் தலைவரின் மேலதிக ஒரு வாக்கினால் நிறைவேறியது.

சபையின் விசேஷ கூட்டம் நேற்று முன்தினம் காலை 9மணியளவில் ஆரம்பமான போது சபைத் தலைவர் யோசப் இருதயராஜா வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்.

அதை வாக்கெடுப்புக்கு விடுமாறு கோரியதை அடுத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. வாக்கெடுப்பின் போது ஆளும்கட்சியான தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ஐந்து பேரும் மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி, சுயேச்சைக் குழு ஆகியவற்றின் தலா ஒரு உறுப்பினருமாக ஏழு பேர் ஆதரவாகவும் எதிர்க்கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும், ஈ. பி.டி.பியைச் சேர்ந்த ஒரு உறுப்பினருமாக 7 பேர் எதிராக வாக்களித்தனர்.

மொத்தமாகவுள்ள 15 உறுப்பினர்களில் ஈ. பி .டி. பியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் சமுகமளிக்காததால் வாக்கெடுப்பில் சமநிலை ஏற்பட்டது.

இதனால் வெற்றி தோல்வியை தீர்மானிக்க வேண்டிய சூழ்நிலையில் சபைத் தலைவருக்கு உள்ள தற்துணிவு அதிகாரத்துக்கு அமைய அவர் மேலதிக ஒரு வாக்கு ஒன்றை அளித்தமையால் வரவுசெலவுத் திட்டம் நிறைவேறியது. (44)

## பாடசாலைகளின் சூழலில் வெள்ளம்



கிளிநொச்சி மாவட்டத்தில் மழை காரணமாக பாடசாலைகளில் வெள்ளம் வடிந்தோட முடியாமல் இருப்பதன் காரணமாக தொற்றுநோய்கள் ஏற்படக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

குளங்கள் நிரம்பி வான்பாய்கின்ற நிலையில் மாவட்டத்தின் அனைத்து நீர் நிலைகளும் தற்போது நீர் நிரம்பி உள்ளன. கடந்த காலங்களில் மழை காலங்களில் பாடசாலைகள் விடுமுறை நாட்கள் என்பதனால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் தற்போது பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருப்பதன் காரணமாக மாணவர்கள் மழைக்கு மத்தியிலும் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

கடும் குளிரான காலநிலையிலும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர். இதனை விட பாடசாலைகளின் சூழலில் பெருமளவு மழை வெள்ளம் தேங்கி நிற்கும் நிலையில் மாணவர்கள் வெள்ளத்தில் விளையாடுகின்ற நிலைமை காணப்படுகின்றன.

மாவட்டத்தில் சுகாதாரத் தரப்பினரால் குளங்கள், ஏனைய நீர் நிலைகள், வெள்ளத்தில் மாணவர்கள் விளையாடக் கூடாது என்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மழை வெள்ளத்தில் விளையாடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இதேவேளை பாடசாலைகளில் தேங்கி உள்ள வடிந்தோட வைப்பதற்கான முயற்சிகளில் பெற்றோர்கள், பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து பல பாடசாலைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

## பொன்விழா மண்டபக் கூரை கிடுகினால் வேயப்பட்டதா?

### -நகரசபை உறுப்பினர் கேள்வி-

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கூரை திருத்த சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபக் கூரை என்ன கிடுகினால் வேயப்பட்டுள்ளதா? என சாவகச்சேரி நகரசபையின் கல்வயல் வட்டார உறுப்பினர் ப.நந்தகோபால் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் நகரசபையில் இடம்பெற்ற 2022ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரித்தல் தொடர்பான கூட்டத்தில் பொன்விழா மண்டப கூரை திருத்த வேலைக்கு நிதி ஒதுக்குவது தொடர்பாக பேசப்பட்ட போதே தான் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியிருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;,

2014ஆம் ஆண்டின் பின்னர் கட்டப்பட்ட நகரசபையின் பொன்விழா மண்டபத்தின் கூரை கடந்த இரு வருடங்களுக்கு முன்பு தான் திருத்தப்பட்டது. தற்போது மீண்டும் அதன் கூரை திருத்த வேண்டிய நிலையில் காணப்படுகிறது என்றால் அது கிடுகினால் வேயப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது என்றார். (13)

## நிரந்தர வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு- மாந்தை கிழக்கின் நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர்கள் இரவில் பணியில் இல்லாததன் காரணமாக நோயாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

ஐயன்கன்குளம் வைத்தியசாலைக்கு வைத்தியராக நியமிக்கப்பட்டவரே நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையில் வாரத்தில் ஐந்து நாட்கள் பகலில் பணியில் இருப்பதாகவும் இரவு வேளைகளில் நோயாளர்கள் சென்றால் அம்புலன்ஸ் மூலம் 10 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு நோயாளர்கள் அனுப்பப்படுகின்றனர்.

நோயாளர்கள் சென்றவுடன் 02 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அம்புலன்ஸ் சாரதிக்கு தொலைபேசி மூலம் நோயாளர்கள் வந்துவிட்டார்கள் வாருங்கள் என்ற அழைப்பு வந்தவுடன் தான் அம்புலன்ஸ் சாரதி வைத்தியசாலைக்கு வந்து நோயாளர்களை மல்லாவி வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதாகவும் அம்புலன்ஸ் சாரதி வைத்தியசாலையில் இரவில் தங்குவதில்லை.

இவ்வாறான நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் தனிப் பிரதேச செயலாளர் பிரிவான மாந்தை கிழக்கில் 3,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாததன் காரணமாக நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறு கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் , மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் பயன்கள் ஏற்படவில்லை. முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாந்தை கிழக்கு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (27)

## வீதியின் நடுவில் பாரிய குழி; அதிகாரிகளின் அசமந்தம்



வீதியின் நடுவே பாரிய குழி காணப்படுகின்றமையால் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சலாக இருக்கின்றமை தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமை குறித்து ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

புலோலி- சாவகச்சேரி வீதியில் மந்திகை சந்திக்கு அருகாமையில் கடந்த வருடம் பாரிய குழி ஒன்று ஏற்பட்டு போக்குவரத்துக்கு இடையூறாக காணப்பட்டது. இது தொடர்பில் மந்திகை பகுதியில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டும் அவர்கள் எந்த வித நடவடிக்கையும் எடுக்காமை காரணமாக அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்களினால் அக் குழி சீர் செய்யப்பட்டது. ஆனால் தற்போது பெய்து வரும் மழை காரணமாக அவ்விடத்தில் மீண்டும் பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தியும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

இக் குழி காரணமாக பாடசாலைக்கு சென்று வரும் மாணவர்கள் மற்றும் வீதியால் பயணிப்பவர்கள் மழை நேரங்களில் பெரும் அசௌகரியங்களுக்கு

உள்ளாவதுடன் குழிக்குள் விழுந்து எழும்பி செல்கின்றனர். எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அசமந்தப் போக்கினால் இவ்விடயம் ஆளுநர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.(44)

## கிண்ணியா படகு விபத்து; உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி



திருகோணமலை- கிண்ணியா ,குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் உள்ளிட்டோருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக முல்லைத்தீவு கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலை மாணவர்கள் , சுடரேற்றி மலர் தூபி அஞ்சலி செலுத்தினர். குறித்த அஞ்சலி நிகழ்வில் ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினரும் கலந்து கொண்டனர். (27,15,55,71)

## பொலிசாரை முற்றாக மாற்றுங்கள் எனக் கோரிக்கை

முல்லைத்தீவு- ஐயன்கன்குளம் பொலிஸ் நிலைய பொலிசார் அனைவரையும் இடம் மாற்றம் வழங்குவதற்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான பிரதி பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் கிராமங்களின் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேற்படி கிராமங்களில் இருந்து தொடர்ச்சியாக மணல், மரங்கள் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படும் நிலையில் துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக கொக்காவில் பகுதிக்கு முன்பாகவே பொலிஸ் இராணுவம் இணைந்த காவலரண் வேண்டும். பழையமுறிகண்டி போன்ற கிராமங்களில் காணிகளில் குவிக்கப்பட்டு டிப்பர்களில் கொண்டு செல்லப்படும் மணலினை பிடிக்க வேண்டும். மரக் கடத்தல்களைத் தடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வரும் நிலையிலும் ஐயன்கன்குளம் பொலிசார் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனை விட மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கும் பொலிசாருக்கும் இடையே நல்லுறவு காணப்படுவதாகவும் இதன் காரணமாகவே மணல் அகழ்வு தொடர்ச்சியாக நடைபெறுவதாகவும் பொது மக்களினால் தெரிவிக்கப்படும் நிலையில் நீண்ட காலமாக ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றுகின்ற அனைத்து பொலிசாரையும் இடமாற்றம் வழங்கி புதியவர்களை நியமிப்பதற்கு பிரதி பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இக்கிராமங்களின் அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள் பிரதி பொலிஸ்மா அதிபரை நேரடியாக சந்திப்பதற்கான சூழல் கொரோனா காரணமாக தடைப்பட்டுள்ளது எனவும் பிரதி பொலிஸ்மா அதிபரை சந்திக்கின்ற போது இக்கிராமங்களில் நடைபெறுகின்ற சட்டவிரோதச் செயற்பாடுகளை பொலிசார் தடுப்பதில் மந்தகதியாக செயற்படுகின்றனர் போன்ற பல்வேறு விடயங்களை தெரியப்படுத்த உள்ளோம் எனவும் பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன. (27)

## 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடவையாக கோவிட் தடுப்பூசி

கோவிட் 19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடவையாக கோவிட்-19 தடுப்பூசியானது மேலதிகமாக இவ்வாரம் முதல் வழங்கப்பட உள்ளதென வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் கொரோனா தொற்று மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டத்துக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்குறிப்பிட்ட நோய் நிலைமையுடைய 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஏற்கனவே சினோபாம் கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் அத் தடுப்பூசியைப் பெற்ற நாளிலிருந்து ஆகக்குறைந்து ஒரு மாத இடைவெளியின் பின் இத் தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளலாம்.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவின் வழிகாட்டல்களுக்கு அமைவாக வடமாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளிலும் இத்தடுப்பூசிகள் வழங்கப்பட உள்ளன.

நோய் நிலைமையால் அல்லது அதற்கு பெற்றுக்கொண்ட சிகிச்சையினால் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள்,

நாட்பட்ட சிறுநீரக நோயுடையவர்கள், உறுப்பு மாற்று (உதாரணமாக சிறுநீரகம், ஈரல்,சுவாசப்பை) மற்றும் என்புமச்சை மாற்று சத்திரசிகிச்சைக்கு உட்பட்டவர்கள், புற்றுநோயுடையவர்கள் மற்றும் புற்றுநோய்க்கு தற்போது சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பவர்கள், மண்ணீரல் தொழிற்பாடு குறைந்தவர்கள் அல்லது நோய்நிலையின் நிமித்தம் மண்ணீரல் அகற்றப்பட்டவர்கள்,வைத்தியரால் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களென பரிந்துரைக்கப்பட்டவர்கள் என 20 வயதிற்கு மேற்குறிப்பிட்ட நோய்நிலைமை உடையவர்கள் மூன்றாவது தடவை மேலதிக தடுப்பூசி பெற்றுக்கொள்ள முன்னுரிமை உடையவர்கள் ஆவர்.

எனவே, மேற்குறிப்பிட்ட தேவையுடையவர்கள் ஏற்கெனவே தடுப்பூசி ஏற்றப்பட்ட அட்டை மற்றும் மருத்துவ அறிக்கையுடன் தமக்கருகிலுள்ள குறிப்பிடப்பட்ட வைத்தியசாலைகளில் இம்மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றார். (40)

# டொலர் இல்லாமல் இரசாயன உரம் இறக்குமதி சாத்தியமா?

## - வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்-

இரசாயன உரங்களையும் களை நாசினிகளையும் திரவ உர வகைகளையும் தனியார் நிறுவனங்கள் இறக்குமதி செய்வதற்கான அனுமதி வர்த்தமானி வெளியிடப்படவுள்ளதாக விவசாய அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது இது சாத்தியமானதா என வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு தங்களுக்கு சாதகமான கம்பனிகளுக்கு அனுமதி வழங்குவதற்கா? இல்லை மக்களின் தொடர்ச்சியான எதிர்ப்பில் இருந்து விடுபடுவதற்கான தந்திரமா? என்ற சந்தேகங்கள் எழுகின்றன.

காரணம் நாட்டில் போதிய டொலர் இல்லாமையே பல இறக்குமதிகள் தடை செய்யப்பட்டமைக்கு மூல காரணமாகும் அவ்வாறு இருக்கையில் அரசாங்கம் தாங்கள் இறக்குமதி செய்ய வேண்டிய உர இறக்குமதியை தனியாரிடம் கொடுப்பதிலும் டொலர் பிரச்சினை தான் உண்மையான காரணம் ஆனால் மக்களை ஏமாற்ற தனியாருக்கு அனுமதி கொடுப்பதாக ஒரு தந்திரோபாய நகர்வை அரசாங்கம் முன்னெடுக்க தீர்மானித்துள்ளது.

தனியார் கம்பனிகள்இறக்குமதி செய்வதாக இருந்தாலும் இலங்கையில் உள்ள வங்கிகளே டொலர்களை வழங்க வேண்டும். ஆனால் வங்கிகளில் டொலர் இல்லை. இல்லாவிட்டால் ஒரு தடவை இறக்குமதி செய்த உரத்திற்கான டொலரை மீளப் பெறமால் தனியார் கம்பனிகளாலும் மீள இறக்குமதி செய்ய முடியாத நிலை உருவாகும்.

ஏற்கனவே நாட்டின் கொழும்பு துறைமுகத்தில் நூற்றுக் கணக்கான கப்பல்கள் நாட்டில் டொலர் இல்லாமையால் சுங்கத்தால் பொருட்களை இறக்குவதற்கான அனுமதி வழங்கப்படாமல் காத்திருக்கின்றன.

ஆகவே அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற எதிர்ப்பினை சமாளிக்கவும் நாங்கள் இறக்குமதிக்கு அனுமதி வழங்கி விட்டோம் என்று கூறுவதற்குமாக இந்த வர்த்தமானியை கொண்டு வருகின்றனர். ஆனால் அரசாங்கம் உர இறக்குமதியை மேற் கொள்ள முடியாது உள்ளமைக்கு டொலர் இன்மையே காரணம். எனவே விவசாயிகளுக்கு தொடர்ந்தும் ஏமாற்றமா? என்றார்.

(75)

வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 01-30, 2021



"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை.!'

சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)

பால்நிலை வன்முறைக்கெதிரான

16 நாள் செயற்பாடு - 2021

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

" பால்நிலை வன்முறைகளை இல்லாதொழிக்க தனி மனிதன் மற்றும் சமூகப் பங்களிப்பும், பொறுப்புணர்வும் இன்றிய மையாதது. பொறுப்புணர்ந்து செயற்படுவோம்!.'

16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம்

## மாவட்ட வைத்தியசாலையில் இருதய சிகிச்சை பிரிவு திறந்து வைப்பு



முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் மிக நீண்ட காலமாக இல்லாமல் இருந்த இருதய சிகிச்சை பிரிவு நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளரும் சட்ட வைத்திய அதிகாரியுமான க.வாசுதேவ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சை நிபுணர் வைத்தியர் பு.லக்ஸ்மன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இருதய சிகிச்சை பிரிவினை நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மு.உமாசங்கர், வவுனியா மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜே.நிலக்சன் உள்ளிட்ட வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் ,வைத்தியசாலை ஊழியர்கள், தாதியர்கள், முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் ,முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களில் இருதய சிகிச்சை பிரிவுகள் இருந்தாலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் எங்குமே மிக நீண்ட காலமாக இல்லாமல் இருந்த இருதய சிகிச்சை பிரிவு நேற்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டதன் ஊடாக மாவட்டத்தில் இருந்து இருதய சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மிக நீண்டதூரம் பயணம் செய்து குறித்த சிகிச்சைகளை பெற்றுவந்தவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (71)

## 6வயதுச் சிறுமியை கடத்திய குற்றச்சாட்டில் 25வயது இளைஞன் கைது



கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி மேற்கு மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 6வயதுச் சிறுமியை கடத்தி சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் 25வயதான இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியின் பெற்றோருடனான பணக் கொடுக்கல்-வாங்கலில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக குறித்த இளைஞன் சிறுமியைக் கடத்தி சித்திரவதை செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.பொலிஸார் சந்தேகநபரான இளைஞனை கைது செய்ததுடன் சிறுமியையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (13)

## உலர் உணவுப் பொதிகள் வழங்கல்



கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட, குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினருக்கு முதலாம் படையினரால் அமெரிக்க நாட்டு இலங்கை வாசிகளின் அனுசரணையுடன் 100 உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி முதலாம் படையினரால் அமெரிக்க நாட்டு இலங்கை வாசிகளின் அனுசரணையுடன் 100 உலர் உணவுப் பொதிகள் கிளிநொச்சியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினருக்கு குறித்த உலருணவுப் பொதிகள் கிளிநொச்சியில் நெலும் பியச கேட்போர் கூடத்தில் வழங்கப்பட்டன.

முதலாம் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரணசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு அரிசி பருப்பு மிளகாய் பால்மா பல சரக்கு பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதிகளை விநியோகித்தமை குறிப்பிடத்தக்கது. (55)

### பயங்கரவாத...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆட்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை நீதிவான் முன் ஆஜர்படுத்தப்படுவார்கள். விசாரணை அதிகாரிகள் வழக்குக் கோப்பை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி குற்றஞ்சாட்டலாமா வேண்டாமா என்ற முடிவிற்குப் பிறகு, முடிவெடுப்பதற்கு மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட ஆகலாம். இந்த காலகட்டத்தில், ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கும் நபர் நீதிவான் முன் ஆஜர்படுத்தப்பட வேண்டும்.

காவலில் இருக்கும் போது, குறிப்பாக அவர்கள் நீடித்த காவலில் இருக்கும் போது, அவர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்த, நீதிவான் முன் ஒரு நபரை ஆஜர்படுத்துவது கட்டாயமாகும். இருப்பினும், கடந்த காலங்களில் இந்த பாதுகாப்பு சில சமயங்களில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கு மறுக்கப்பட்டது. ஏனெனில் வழக்கு கோப்பு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் போது, நீதிபதி சில சமயங்களில் வழக்கின் திகதியை குறிப்பிடார் (அதாவது அடுத்த திகதி வழங்கப்படவில்லை). தற்போது, கொவிட்–19 விதிமுறைகளின் அடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கோப்புகள் அனுப்பப்பட்ட பல வழக்குகளுக்கு திகதி குறிப்பிடப்படவில்லை. சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழிகாட்டுதல்கள் பெறப்பட்டால் மட்டுமே அந்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் உத்தரவிடுவார் . இது பொதுவான நடைமுறையாக மாறினால், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள நபர்களின் உரிய நடைமுறை உரிமைகளை மேலும் கீழறுக்கலாம். சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின் படி, 2021 ஆம் ஆண்டு அடோபர் 28 ஆம் திகதி வரையில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக 85 பேரும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான குற்றங்களுக்காக 205 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் 14 பேர் பத்து வருடங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் 10 பேர் ஐந்து முதல் பத்து வருடங்களாக விளக்கமறியலில் உள்ளனர்.

**உரிமைகள் முறியடிக்கும் மூன்று விடயங்கள்; அடிப்படைவாதம்,வன்முறை தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம்**

உலகளாவிய ரீதியில், பயங்கரவாதம், வன்முறை தீவிரவாதம் மற்றும் அடிப்படைவாதம் , ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டவரையறைகள் இல்லாத அனைத்து விதிமுறைகளும், தன்னிச்சையான மற்றும் தவறான அரச நடவடிக்கையை நியாயப்படுத்த நாடுகளால் ஒன்றிணைக்கப்பட்டு கருவியாக்கப்படுகின்றன. இலங்கையில்,உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னரான தாக்குதல்கள், இந்த விதிமுறைகள் பாதுகாப்பு இயந்திரத்தின் அகராதிக்குள் நுழைந்து, அதன் மூலம் மனித உரிமைகளை மீறும் தன்னிச்சையான அரச நடவடிக்கையை நியாயப்படுத்தப் பயன்படுத்தப்படும் சட்டரீதியாக வரையறுக்கப்படாத மற்றும் குறியிடப்படாத தெளிவற்ற குற்றங்களை உருவாக்க உதவுகிறது.

அவற்றின் பொதுவான பயன்பாடு இருந்தபோதிலும், தீவிரவாதக் கருத்துக்கள் , அத்தகைய கருத்துக்களைக் கொண்ட ஒரு நபர் எவ்வாறு தீவிரவாதியாக மாறுகிறார் மற்றும் அந்த நபர் சமூகத்திற்கு அச்சுறுத்தலாக மாறும்போது என்ன என்பதில் இன்னும் உடன்பாடு இல்லை. இருப்பினும், பல நாடுகள் நபர்களை கைது செய்வது அவர்கள் செய்யும் செயல்களின் அடிப்படையில் அல்ல, ஆனால் அரசு நம்பும் ஆட்களின் அடிப்படையில் இந்த நம்பிக்கைகள் அரசால் மாறுபட்ட, ஆபத்தான மற்றும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்றன. மேலும் அவை அடிப்படைவாதமயமாக்கப்படுவதற்கு சமமானவை. பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தின் கீழ் அந்த நபரை கைது செய்ய அடிப்படைவாதமாக்கல் போதுமானதாக கருதப்படுகிறது.

தமிழர்களில் குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் நீண்டகாலமாக மற்றவர்களை விட தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் போலியான நியாயங்களின் பேரில் தடுத்து வைக்கப்படும் அபாயம் கொண்டவர்களாகவும் பார்க்கப்படுகிறார்கள் முன்னாள் போராளிகள் போன்ற தமிழர்கள் அல்லது நினைவேந்தல் போன்ற சில செயல்கள், மாறுபட்ட மற்றும் ஆபத்தானதாகக் கருதப்படுகின்றன. தற்போதைய அரசாங்கம் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டதை நிராகரிப்பதால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் நடத்தும் போராட்டங்கள் மற்றும் நீதிக்கான கோரிக்கைகளும் மாறுபட்டதாகவும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவும் கருதப்படுகின்றன. எனவே அவர்கள் முறையான (போராட்டங்களைத் தடை செய்யும் நீதிமன்ற உத்தரவுகள்) மற்றும் முறைசாரா விதத்தில் (உளவுத்துறை அதிகாரிகள் எதிர்ப்பாளர்களைக் கண்காணித்து அவர்களை தொலைபேசியில் எதிர்ப்புத் தெரிவிக்கும்படி எச்சரிப்பது) அவர்களை நசுக்குவதற்கான முயற்சிகளுக்கு உட்பட்டுள்ளனர். இது அகநிலைக் காரணிகள் மற்றும் முடிவெடுக்கும் ஆற்றல் கொண்ட நபரின் சார்புகளின் விளக்கமாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பயங்கரவாதம் பற்றிய வரையறை இல்லாததால், பயங்கரவாதக் குற்றம் எது என்பது குறித்து முடிவெடுப்பது எப்பொழுதும் புறநிலைத் தரங்களுக்கு மாறாக அகநிலை அடிப்படையிலானது. பயங்கரவாதத்திற்கான வரையறை இல்லாத நிலையில்,பயங்கரவாத தடைச் சட்டம் ஏனைய சட்டங்களில் இருக்கும் குற்றங்களைக் கொண்டுள்ளது. அதனை பயங்கரவாத தடைச்சட்டம் குறிப்பிடுகிறது. உதாரணமாக , 2(1) (ஏ ) மற்றும் 2 (1)(பி ) பிரிவுகள், தண்டனைச் சட்டத்தின் கீழ் மரண தண்டனைக்குரிய ஒரு குறிப்பிட்ட நபரின் மரணத்திற்கு காரணமான ஒரு செயலானது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றமாகும் என்று கூறுகிறது. தனது கவிதைகள் மூலம் தீவிரவாதத்தை பரப்பியதாகக் கூறி கவிஞர் அஹ்னாப் ஜஸீம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் சுமார் இரண்டு ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ள வழக்கு இதை விளக்குகிறது. ஜஸீம் சமீபத்தில் குற்றம் சாட்டப்பட்டார், இருப்பினும் கவிதைகள் வன்முறை அல்லது பயங்கரவாதத்தைத் தூண்டும் அம்சங்களை காட்டவில்லை.

**அரசால் அடிப்படைவாதமயமாக்கப்பட்டது**

ஜோன் ஹோர்கன் போன்ற நிபுணர்கள் , ஒரு நபர் ஒரு கட்டத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதற்கான பரிணாமத்தை 'அது அதிகளவிலான சூழ்நிலைகள், அதிர்ஷ்டம் மற்றும் இறுதியில் ஒரு நபரின் கணிக்க முடியாத குறிப்பிட்ட தேர்வுகளைச் செய்யும் திறனைப் பொறுத்த ஒரு சிக்கலான செயல்முறையாகும்' என் று கருதுகின்றனர். 'மென்மையான சட்ட விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட மனித உரிமைகள் குறைபாடுள்ள பயங்கரவாத எதிர்ப்பு நடைமுறைகள், உலகெங்கிலும் நீடித்த மனித உரிமை மீறல்களை விளைவிப்பதோடு, தேசிய அளவில் வன்முறை மற்றும் தீவிரவாதத்தை உற்பத்தி செய்வதற்கு கணிசமான காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளன' என்று நிக் அலோசின் சுட்டிக்காட்டுகிறார்.

இலங்கையின் அனுபவம் இந்த முடிவுகளுக்கு ஆதாரமாகவுள்ளது . பல தசாப்தங்களாக, சிறுவர்கள் சிறையில் பெரியவர்களாகிவிட்டனர். கடந்த காலத்தில் அவர்கள் தமிழர்களாக காணப்பட்டனர் . அவர்களின் வரிசையில் தற்போது முஸ்லிம்களும் இணைந்துள்ளனர். சமீபத்திய எடுத்துக்காட்டுகள், பயங்கரவாதத்தை உருவாக்காத செயல்களுக்காக கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்களை உள்ளடக்கியது. சஹ்ரான் நடத்தும் மத முகாமிற்கு ஆண் உறவினர்களால் அழைத்துச் செல்லப்பட்ட பதின்மப் பராய சிறுவர்கள் உள்ளனர். அங்கு அவர்கள் இரண்டு நாட்கள் கழித்தனர், பின்னர் கைது செய்யப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் காவலில் வைக்கப்பட்டனர். வாட்ஸ்அப் குரூப்பில் அலங்காரக் கத்திகளை வைத்திருந்ததற்காக அல்லது உணர்ச்சிவசப்பட்ட வார்த்தைகளை பிரயோகித்ததற்காக இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சூழலுக்கு அப்பாற்பட்டது மாறுபட்டதாகக் கருதப்படலாம். சிறைவாசம் இந்த இளைஞர்களின் அரசின் மீதான நம்பிக்கையை எப்படி வடிவமைக்கும்? புனர்வாழ்வு என்ற பெயரில் தங்களின் தடுப்புக்காவல் மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கப்படுவதை அவர்கள் எப்படி உணருவார்கள்?

அரசினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதன் விளைவாக இளைஞர்கள் அரசால் தீவிரவாதிகளாக்கப்படுவது இலங்கையில் ஒரு புதிய நிகழ்வு அல்ல. அரசால் இழைக்கப்பட்ட துஷ்பிரயோகங்கள் தமிழ் இளைஞர்கள் வன்முறையைப் பயன்படுத்துவதற்கான அவர்களின் பாதையில் உந்துதல் காரணியாக செயற்பட்டன. வன்முறையைப் பயன்படுத்துவது, வன்முறையில் ஈடுபடுவதைத் தடுக்கும் என்று அரசு கருதுகிறது. முரணானதாக , அரச வன்முறையில் இருந்து தப்பிக்க அல்லது பழிவாங்கவும், சமூகத்தை அதிலிருந்து விடுவிக்கவும் ஆயுதக் குழுக்களில் சேர ஆட்களைத் தூண்டியது. அதேபோன்று, முஸ்லிம் இளைஞர்களுக்கு எதிரான துஷ்பிரயோக நடவடிக்கையின் மூலம், தங்களையும் தங்கள் சமூகங்களையும் பாதுகாப்பதற்கான ஒரே வழி அரசுக்கு எதிரான வன்முறையைப் பயன்படுத்துவதே என்று அவர்கள் உணரக் கூடிய சூழலை அரசு உருவாக்குகிறது.

**சர்வதேச சமூகத்தின் பொறுப்பு**

இலங்கை அரசாங்கத்தின் வகிபாகத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் சர்வதேச சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பங்கை ஆய்வு செய்ய வேண்டும். ஏனெனில் அவை மென்மையான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை அமுலாக்குவதில் அரசாங்கங்களுக்கு சிறப்பாக நிதியளிக்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றன.

இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பில் மனித உரிமைகள் தடயத்தின் பலவீனத்தை பயங்கரவாதத் தடைச்சட்டம் வெளிப்படுத்தினாலும், சர்வதேச சமூகம் தொழில்நுட்ப உதவி மற்றும் திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றை உண்மையான மாற்றத்திற்கு மாற்றாக, பாதகமான தாக்கத்தை குறைக்கும் நம்பிக்கையில் தொடர்ந்து வழங்கி வருகிறது. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் சர்வதேச தரத்தின் படி பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்கு விசாரணைகளை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்களுக்கு பயிற்சி வழங்குவது குறித்த ஏற்பாடு ஒரு உதாரணம். பயங்கரவாத தடைச்சட்டமே சர்வதேச தரத்தை கடைப்பிடிக்காதபோது, அதுவும் சர்வதேச தரத்திற்கு குற்றவியல் நீதி முறைமை கடும் எதிர்ப்பான தன்மையை கொண்டிருக்கும் போது சர்வதேச தரநிலைகள் பின்பற்றப்படுவதை வழக்கறிஞர்கள் எப்படி உறுதிசெய்ய முடியும் என்ற கேள்வி எஞ்சியிருக்கிறது.

இந்த தலையீடுகள் அரசாங்கத்திற்கு கவர்ச்சிகரமானவை. ஏனெனில், Ni அணிlain விவரிக்கிறது, சம்பந்தப்பட்ட தயாரிப்புகளின் சட்டப்பூர்வமற்ற தன்மையின் வலுவான தொனி உள்ளது. சட்டவிதிகளை உருவாக்குவதில் எந்தவொரு வகிபாகத்தையும் (மற்றும் நோக்கம்) வெளிப்படையாக மறுக்கிறது என்று நிக் அலோசின் விபரிக்கிறார் .எனவே, சர்வதேச சமூகத்தையும் ஐ. நா. வையும் தூரத்தில் வைத்திருக்க உதவும் தீங்கற்ற தலையீடுகளாக அரசாங்கம் அவற்றைக் கருதக்கூடும் . ஆயினும்கூட,நிக் அலோசின் வெளிப்படுத்துவதுபோன்று , இந்த 'முறைசாரா தரநிலைகள் மற்றும் நடைமுறைகள் சர்வதேச சட்ட விதிமுறைகள் மற்றும் ஏற்பாடுகளை பாதிக்கின்றன' மற்றும் மனித உரிமைகள் விதிமுறைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் மற்றும் மனித உரிமைகளை மீறும் துஷ்பிரயோகமான நடைமுறைகளை நிலைநிறுத்தி சாதாரணமானவையாக்குகின்றன.

கிரவுண்ட் வியூஸ்

# படகு கவிழ்ந்த சம்பவம் தொடர்பில் விசாரணைக்கு கிழக்கு ஆளுநர் பணிப்பு



கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் செவ்வாய்க்கிழமை காலை மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணனுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து உடனடி விசாரணை நடத்தி, படகை இயக்க அனுமதி வழங்கியது யார், பராமரிப்பை மேற்கொண்டது உள்ளிட்ட விவகாரங்களை உடனடியாக தெரிவிக்க வேண்டும் என்றும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்காக மாகாண நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி.முத்துபண்டா தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொலிசார் விசாரணை நடத்த திருகோணமலை மாவட்ட பொலிஸ்பொறுப்பதிகாரிக்கு ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். இந்த சம்பவத்தில் மாணவர்கள் உட்பட 6 பேர் பலியாகினர் மற்றும் சுமார் 20 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ஆளுநர் தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக விசேட அதிகாரிகள் குழுவொன்று சம்பவம் இடம்பெற்ற போது அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். இந்த சந்தர்ப்பத்தில் பிரதேச மக்கள் அமைதியாக இருக்குமாறும் ஆளுநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கல்முனை வர்த்தக சங்கத்தின் பெயரை பொய்யாகக் கூறியதற்கு எதிராக வழக்கு



கல்முனை அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் பொது நிறுவனங்களின் சம்மேளனத்தின் தலைவர் டாக்டர்.எஸ்.எம்.ஏ.அஸீஸுக்கும் கல்முனை வர்த்தக சங்கத்திற்குமிடையில் கருத்து முரண்பாடுகள் உச்சகட்டத்தை அடைந்துள்ளதுடன் டாக்டர் அஸீஸுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் முஸ்தீபுகள் இடம் பெற்று வருகின்றன.

அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் பொது நிறுவனங்கள் எனும் பெயரில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், பட்ஜெட்டுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனக்கோரி அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கல்முனை வர்த்தக சங்கத்தின் பெயரை பொய்யாகக் கூறி ஊடகங்களுக்கு பொய் செய்தி வெளியிட்டமைக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்முனை வர்த்தக சங்க தலைவர் அல்-ஹாஜ் சித்தீக் மரைக்கார் தெரிவித்துள்ளார்.

# மத்திய மாகாணத்தில் பலத்த மழை; 1,000 க்கும் மேற்பட்டோர் பாதிப்பு

மத்திய மாகாணத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக கண்டி,மாத்தளை,மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் 268 குடும்பங்களைச் சேர்ந்த 1,066 பேர் பாதிக்கப் பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

அனர்த்த முகாமைத்துவ மையத்தின் அறிக்கையின் பிரகாரம், கண்டி மாவட்டத்தில் 63 குடும்பங்ளைச் சேர்ந்த 252 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 161 குடும்பங்களைச் சேர்ந்த 719 பேரும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் 24 குடும்பங்களைச் சேர்ந்த 95 பேரும் இவ்வாறு பாதிக்கப் பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தின் அக்குறனையில் 02 குடும்பங்களின் 07 பேர்,ஹாரிஸ்பத்துவவில் 05 குடும்பங்களின் 23 பேர்,தொளுவயில் 04 குடும்பங்களின் 22 பேர்,தும்பனையில் 18 குடும்பங்களின் 68 பேர்,உடுதும்பரயில் 01 குடும்பத்தில் 04 பேர், கங்கவட கோரளையில் 04 குடும்பங்களின் 16 பேர் யடிநுவரயில் 07 குடும்பங்களின் 31 பேர், ஹதரலியத்தயில் 14 குடும்பங்களின் 54 பேர்,பாத்ததும்பரவில் 01குடும்பத்தில் 04 பேர் என்ற வாறு மக்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.மேலும் மாத்தளை மாவட்டத்தின் உக்குவளையில் 33 குடும்பங்களின் 120 பேர், அம்பன்கங்க கோரளையில் 03குடும்பங்களின்0 13 பேர்,தம்புள்ளையில் 04 குடும்பங்களின் 14 பேர், மாத்தளையில் 39 குடும்பங்களின் 144 பேர்,இறத்தோட்டையில் 90 குடும்பங்களின் 381 பேர்,வில்கமுவவில் 02குடும்பங்களின் 05பேர்,கலேவெலயில் 02குடும்பங்களின் 06 பேர்,யடவத்தையில் 08குடும்பங்களின் 33 பேர் பாதிக்கப் பட்டிருப்பதாகவும்

நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலையில் 15 குடும்பங்களின் 57 பேர், வலப்பனையில் 08குடும்பங்களின் 33பேர்,நுவரெலியாவில் 01 குடும்பத்தில் 05 பேரும் பாதிக்கப் பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஊவாவின் முக்கிய பகுதிகளில் 93 பேருக்கு கோவிட் தொற்று

பசறை, பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை ஆகிய பகுதிகளில் 24 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ரபிட் அன்டிஜன் பரிசோதனையில் 93 பேருக்கு கோவிட் 19 தொற்று உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட பொது சுகாதாரப் பரிசோதகர் சங்க பதுளை மாவட்ட உப தலைவர் எஸ். சுதர்சனை சந்தித்து, கோவிட் 19 தொற்று குறித்து வினவியபோதே, அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில், பசறையில் 18 பேரும், பதுளையில் 12 பேரும், பண்டாரவளையில் 51 பேரும், அப்புத்தளையில் 12 பேருமாக 93 பேர் கோவிட் 19 தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## சமையல் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் பணிப்பாளர் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதால் எமது அனைவரது வீடுகளிலும் எவ்வேளையிலும் வெடித்து சிதறும் குண்டுகளுடனேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி.யான உறுப்பிர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுக்களின் செலவினத்தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த

அவர் தொடர்ந்தும் பேசுகையில், சதோச நிறுவனத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தியதனால் ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாக பதவி விலகிய நுகர்வோர் விவகார நடவடிக்கைகள் அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாள் துஷான் குணவர்த்தன சமூக வலைத்தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.. அதில் , எல்.பி. 12.5 காஸ் சிலிண்டரில் கலவை செய்யவேண்டிய அளவை மாற்றி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

காஸ் சிலிண்டரில் இருக்க வேண்டிய பிரபோனின் அளவு 20வீதமும் டீடன் அளவு 80 வீதமுமாகும்.ஆனால் இன்று அந்த காஸ் சிலிண்டரில் இருக்கவேண்டிய கலவையின் அளவில் மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது.

பிரபோன் மற்றும் டீடன் 50வீதமாக மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதன் மூலம் நுகர்வோர் பணம் சூறையாடப்படுகின்றது . இந்த நடவடிக்கையால் காஸ் விரைவாக தீர்ந்துவிடும். 30நாட்களுக்கு பாவிக்கும் காஸ் சிலிண்டர் 20 நாட்களுக்கே பாவிக்க முடியும். அதுமாத்திரமல்ல, அவர் தெரிவித்திருக்கும் பயங்கரமான செய்தி இன்னொன்றுள்ளது. அதாவது , காஸ் சிலிண்டரில் பிரபோனின் அளவு அதிகம் என்பதால் காஸ் கசிந்து வெடி குண்டுபோல் எவ்வேளையிலும் வெடிக்கும் அபாயம் இருப்பதாக எச்சரித்துள்ளார். தற்போது நாம் அனைவரும்,எமது வீடுகளில் எவ்வேளையிலும் வெடித்து சிதறக்கூடிய வெடிகுண்டுகளுடனேயே வாழ்கின்றோம் எனவும் அவர் கூறினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு: 021 7388 307 / 021 222 3735
021 222 4077 advtyarlthinakkural@gmail.com


**கேள்வி அறிவித்தல்.**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**
**சபை நிதி - 2021**

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வட மாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக்கொண்டுள்ளதும் அட்டவணையிற்காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பு, கட்டிட நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,பருத்தித்துறை வீதி, புத்தூர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)**இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணிவரை 25.11.2021 ஆம் திகதியில் இருந்து 08.12.2021 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர், யாழ்ப்பாணம்** எனும் இடத்திலிருந்து 25.11.2021ஆம் திகதியிலிருந்து 09.12.2021ஆம் திகதி வரையுள்ள வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி ,புத்தூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 09.12.2021 ஆம் திகதி பி.ப **12.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழ் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது .
10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 01.12.2021 ஆம் திகதி பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. மேற்படி கேள்வி கோரல் தொடர்பில் வலி கிழக்கு பிரதேச சபையின் பெறுகைக்குழுவின் முடிவே இறுதியானது. பெறுகைக்குழுவின் முடிவு தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
12. **கேள்வி ஆவணங்களை வழங்கும்போது கொரோனா (COVID 19) வைரஸ் தொற்றுத்தொடர்பான சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும், கேள்வி ஆவணங்களை பெறவரும்போது கூட்டமாக வருவதை தவிர்த்து ஒருவர் மட்டும் வருகை தரவேண்டும், சுகாதார முற்பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வருகை தர வேண்டும்.**

| | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(13)/2 /Council/PII/01/ 2021 | மடத்தடி வீதி 4ம் ஒழுங்கை திருத்தம், அச்சுவேலி வடக்கு | 1.07 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 10,745/- | 2022.03.07 |
| 02 | NP/14/41(13)/2 /Council/PII/02/ 2021 | விமான நிலைய வீதி திருத்தம், பத்தைமேனி | 2.71 | 60 நாட்கள் | C8 / C7 (Highways) | 88 நாட்கள் | 27,172/- | 2022.03.07 |
| 03 | NP/14/41(13)/2 /Council/PII/03/ 2021 | கல்வியோரம் வீதி திருத்தம், அச்சுவேலி தெற்கு | 0.80 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 8,011/- | 2022.03.07 |
| 04 | NP/14/41(13)/2 /Council/PII/04/ 2021 | பைத்தோலை வீதி திருத்தம், அச்சுவேலி தெற்கு | 1.14 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,480/- | 2022.03.07 |
| 05 | NP/14/41(13)/2 /Council/PII/05/ 2021 | குருக்கள் வீதி திருத்தம், அச்சுவேலி வடக்கு | 1.10 | 60 நாட்கள் | C9/C8 (Highways) | 88 நாட்கள் | 11,040/- | 2022.03.07 |
| 06 | NP/14/41(13)/2 /Council/PII/06/ 2021 | வளலாய் சந்தை திருத்தம் | 0.64 | 60 நாட்கள் | C9 / C8 | 88 நாட்கள் | 6,495/- | 2022.03.07 |
| 07 | NP/14/41(13)/2 /Council/PII/07/ 2021 | கூனன்காடு இந்து மயானத் திருத்தம், வளலாய் | 0.46 | 60 நாட்கள் | C9 / C8 | 88 நாட்கள் | 4,640/- | 2022.03.07 |
| 08 | NP/14/41(13)/2 /Council/PII/08/ 2021 | ஔவையார் சனசமூக நிலைய வீதி திருத்தம், நவக்கிரி | 1.10 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,025/- | 2022.03.07 |
| 09 | NP/14/41(13)/2 /Council/PII/09/ 2021 | காட்டுவெளி வீதி திருத்தம், ஆவரங்கால் | 1.10 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,100/- | 2022.03.07 |
| 10 | NP/14/41(13)/2 /Council/PII/10/ 2021 | வன்னியசிங்கம் வீதியும் உப ஒழுங்கையும் திருத்தம், ஆவரங்கால் மேற்கு | 1.35 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 13,565/- | 2022.03.07 |
| 11 | NP/14/41(13)/2 /Council/PII /11/ 2021 | வரிக்கம்பரை வீதியில் மதகு அமைத்தல், புத்தூர் கிழக்கு | 0.25 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 2,600/- | 2022.03.07 |
| 12 | NP/14/41(13)/2 /Council/PII/12/ 2021 | வீரவாணி வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், வாதரவத்தை | 0.83 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 8,315/- | 2022.03.07 |
| 13 | NP/14/41(13)/2 /Council/PII/13/ 2021 | கலைவாணி வீதி திருத்தம் கட்டம் 2 புத்தூர் கிழக்கு | 0.91 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 9,160/- | 2022.03.07 |
| 14 | NP/14/41(13)/2 /Council/PII/14/ 2021 | பெற்றோல் செட் அருகாமை வீதி திருத்தம், சிறுப்பிட்டி | 1.10 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,100/- | 2022.03.07 |
| 15 | NP/14/41(13)/2 /Council/PII/15/ 2021 | ஞானவைரவர் வீதி 1ம் குறுக்கு ஒழுங்கை திருத்தம், சிறுப்பிட்டி வடக்கு | 1.11 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,170/- | 2022.03.07 |
| 16 | NP/14/41(13)/2 /Council/PII/16/ 2021 | தனிப்பனை வீதி, வேலிபுரம் வீதி திருத்தம், அச்செழு | 2.46 | 60 நாட்கள் | C8/ C7 (Highways) | 88 நாட்கள் | 24,660/- | 2022.03.07 |
| 17 | NP/14/41(13)/2 /Council/PII/17/ 2021 | ஐயாவத்தை வீதி உப ஒழுங்கை திருத்தம், நீர்வேலி தெற்கு | 0.78 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 7,890/- | 2022.03.07 |
| 18 | NP/14/41(13)/ 2/Council/PII/18 /2021 | பேக்கரி அருகாமை வீதி திருத்தம், நீர்வேலி தெற்கு | 1.03 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 10-310/ | 2022.03.07 |
| 19 | NP/14/41(13)/2 /Council/PII/19/ 2021 | கயட்டைப்புலம் வீதி திருத்தம் தொடர் வேலை(கருணை இல்லம் வீதி), நீர்வேலி தெற்கு | 6.20 | 90 நாட்கள் | C7 / C6 (Highways) | 118 நாட்கள் | 62,050/- | 2022.04.06 |
| 20 | NP/14/41(13)/2 /Council/PII/20/ 2021 | சரஸ்வதி சனசமூக நிலைய வீதி திருத்தம், நீர்வேலி வடக்கு | 0.80 | 60 நாட்கள் | C8 / C7 (Highways) | 88 நாட்கள் | 8,050/- | 2022.03.07 |
| 21 | NP/14/41(13)/2 /Council/PII/21/ 2021 | செல்லத்துரை, கலைவாணி முன்பள்ளி முன் வீதி திருத்தம், இருபாலை | 1.10 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,070/- | 2022.03.07 |
| 22 | NP/14/41(13)/2 /Council/PII/22/ 2021 | பெரியபுலம் வீதி திருத்தம், கோப்பாய் தெற்கு | 1.89 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 18,975/- | 2022.03.07 |
| 23 | NP/14/41(13)/2 /Council/PII/23/ 2021 | வைராக்கண்டி வீதி திருத்தம், கோப்பாய் மத்தி | 1.00 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 10,100/- | 2022.03.07 |
| 24 | NP/14/41(13)/2 /Council/PII/24/ 2021 | கல்வியியற் கல்லூரி (வடக்கு) பின் வீதி திருத்தம், கோப்பாய் தெற்கு | 2.17 | 60 நாட்கள் | C8 / C7 (Highways) | 88 நாட்கள் | 21,710/- | 2022.03.07 |
| 25 | NP/14/41(13)/2 /Council/PII/25/ 2021 | கொய்யாத்தோட்ட வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், இருபாலை கிழக்கு | 1.09 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 10,935/- | 2022.03.07 |
| 26 | NP/14/41(13)/2 /Council/PII/26/ 2021 | ஆஸ்பத்திரி வீதி திருத்தம், உரும்பிராய் மேற்கு | 1.10 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,100/- | 2022.03.07 |
| 27 | NP/14/41(13)/2 /Council/PII/27/ 2021 | கற்பகபிள்ளையார் 3ம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் வடக்கு | 1.38 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 13.805/- | 2022.03.07 |
| 28 | NP/14/41(13)/2 /Council/PII/28/ 2021 | மாணிப்பாய் வீதி 4ம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் வடக்கு | 1.38 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 11,100/- | 2022.03.07 |
| 29 | NP/14/41(13)/2 /Council/PII/29/ 2021 | ஊரெழு 1ம் குறுக்கு வீதி 3ம் ஒழுங்கை திருத்தம், ஊரெழு | 0.82 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 8,265/- | 2022.03.07 |

தியாகராஜா நிரோஷ்
தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.
**2021.11.24.**

# கடும் மழையால் கைவிடப்பட்டது இலங்கை - மேற்கிந்திய முதல் டெஸ்ட்





இலங்கைக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையில் காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3 ஆம் நாள் ஆட்டம் 38 ஓவர்கள் மாத்திரம் வீசப்பட்ட நிலையில் மழை காரணமாக நிறுத்தப்பட்டது.

எவ்வாறாயினும் மேற்கிந்தியத் தீவுகள் பலோ ஒன்னைத் தவிர்த்துக்கொண்டது.

புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமையும் மழை பெய்யக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளதால் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பெரும்பாலும் வெற்றிதோல்வியின்றி முடிவடைய வாய்ப்புள்ளது.

இலங்கை அணி இப்போதைக்கு 162 ஓட்டங்களால் முன்னிலையில் இருக்கின்றது.

போட்டியின் 3 ஆம் நாளான நேற்று காலை தனது முதலாவது இன்னிங்ஸை 6 விக்கெட் இழப்புக்கு 136 ஓட்டங்கள் என்ற நிலையிலிருந்து தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள், சீரற்ற காலநிலையால் பிற்பகல் 1 மணிக்கு ஆட்டம் தடைப்பட்டபோது 9 விக்கெட்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அதன் பின்னர் மாலைவரை மழை பெய்ததால் ஆட்டம் தொடரவில்லை.

2 ஆம் நாள் ஆட்டத்தில் 113 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்த மேற்கிந்தியத் தீவுகள், நேற்றைய ஆட்டத்தின்போது 3 விக்கெட்களை மாத்திரம் இழந்ததுடன் மொத்த எண்ணிக்கைக்கு மேலும் 114 ஓட்டங்களை சேர்த்துக்கொண்டது. மொத்த எண்ணிக்கை 100 ஓட்டங்களாக இருந்தபோது நேற்றைய தினம் 7 ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த கய்ல் மயர்ஸும் ஜேசன் ஹோல்டரும் 73 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இந் நிலையில் மயர்ஸ் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மொத்த எண்ணிக்கைக்கு மேலும் 12 ஓட்டங்கள் சேர்ந்தபோது ஜேசன் ஹோல்டர் 36 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து ஜொவா டா சில்வா, ரக்கீம் கோர்ன்வோல் ஆகிய இருவரும் 9ஆவது விக்கெட்டில் 49 ஓட்டங்களைப் பகிர்ந்து பலோ ஒன்னைத் தவிர்த்தனர். கோர்ன்வோல் 39 ஓட்டங்களைப் பெற்றதுடன், ஜொவா டா சில்வா 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இலங்கை பந்துவீச்சில் ப்ரவீன் ஜயவிக்ரம 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ரமேஷ் மெண்டிஸ் 75 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இலங்கை அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 386 ஓட்டங்களைப் பெற்றது.

அணித் தலைவர் திமுத் கருணாரட்ன (147), தனஞ்சய டி சில்வா 61, பெத்தும் நிஸ்ஸன்க 56, தினேஷ் சந்திமால் (45) ஆகியோர் துடுப்பாட்டத்தில் பிரகாசித்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் பந்துவீச்சில் ரொஸ்டன் சேஸ் 63 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும் ஜோமெல் வொரிக்கன் 87 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

-உலக மாஸ்டர்ஸ் பட்மின்டன்-

# போட்டிக்கு தெரிவானார் எம்.பி. பிரதீப் வித்தான



கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சஹன் பிரதீப் வித்தான உலக மாஸ்டர்ஸ் பட்மின்டன் சம்பியன்ஷிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

இப்போட்டித் தொடரானது, இம்மாதம் 25 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை ஸ்பெய்னின் செவில் நகரில் நடைபெறவுள்ளது.

இவர் 2019 இல் நடைபெற்ற கம்பஹா மாவட்ட பட்மின்டன் சம்பியன்ஷிப் போட்டியில் சம்பியனாகியிருந்ததுடன், 40 வயதிற்கு மேற்பட்ட போட்டிப் பிரிவில் கம்பஹா மாவட்ட பட்மின்டன் சம்பியனுமாகியிருந்தார்.

# அபுதாபி டி-10 தொடரில் சிறப்பாக செயல்படும் இலங்கை வீரர்கள்



அபுதாபியில் நடைபெற்றுவரும் அபுதாபி டி10 கிரிக்கெட் தொடரில் இலங்கை கிரிக்கெட் வீரர்களான வனிந்து ஹசரங்க மற்றும் பானுக்க ராஜபக்ச இருவரும் சிறப்பாக செயற்பட்டுள்ளனர்.

டெக்கன் கிளேடியேட்ர்ஸ் அணிக்காக விளையாடிவரும் வனிந்து ஹசரங்க, டீம் அபுதாபி அணிக்கெதிராக போட்டியில் 4 விக்கெட்டுக்களையும், டெல்லி புள்ஸ் அணிக்கெதிரான போட்டியில் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தார்.

மேலும், டீம் அபுதாபி அணிக்கெதிரான போட்டியில் 18 பந்துகளுக்கு 30 ஓட்டங்களை அதிரடியாக விளாசி தனது சகலதுறை ஆற்றல்களை வெளிப்படுத்தியிருந்தார் வனிந்து ஹசரங்க. இதேவேளை, பானுக்க ராஜபக்ச விளையாடிவரும் சென்னை பிரேவ்ஸ் அணியில் தசுன் ஷானக்க தலைவராக செயற்பட்டு வருகிறார்.

இதில் டெல்லி புள்ஸ் அணிக்கெதிரான போட்டி மற்றும் டீம் அபுதாபி ஆகிய அணிகளுக்கெதிராக அடுத்தடுத்து இரண்டு அரைச்சதங்களை விளாசினார் பானுக்க ராஜபக்ச.


# எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி.

LB FINANCE 1971 - 2021 50 வருட சாதனைகளுடன், நூற்றாண்டை நோக்கிய பார்வை...

2006 இன் 02ம் இலக்க மத்திய வங்கி வழிகாட்டுதல்களுக்கு அமைவாக பிரசுரிக்கப்பட்ட நிதி அறிக்கைகள்

| 30ம் திகதி செப்டெம்பர் மாதம் முடிவடைந்த காலத்திற்கான முக்கிய நிதித்தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது) ரூ. மில்லியன் | நிறுவனம் | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | நடைமுறைக் காலம் 01.04.2021 இலிருந்து 30.09.2021 வரை | முன்னைய காலம் 01.04.2020 இலிருந்து 30.09.2020 வரை | நடைமுறைக் காலம் 01.04.2021 இலிருந்து 30.09.2021 வரை | முன்னைய காலம் 01.04.2020 இலிருந்து 30.09.2020 வரை |
| வட்டி வருமானம் | 12,618 | 13,162 | 12,646 | 13,233 |
| வட்டிச் செலவு | (4,277) | (6,476) | (4,285) | (6,485) |
| **தேறிய வட்டி வருமானம்** | **8,341** | **6,686** | **8,361** | **6,748** |
| ஏனைய வருமானம் | 1,019 | 1,057 | 1,014 | 1,065 |
| வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட இலாபம்/(நட்டம்) | (3) | 3 | (3) | 3 |
| தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக) | (2,938) | (2,704) | (2,975) | (2,748) |
| பெறுமதி இழப்பு | (760) | (1,128) | (703) | (1,128) |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **5,659** | **3,914** | **5,694** | **3,940** |
| வரிகள் | (2,246) | (1,634) | (2,243) | (1,643) |
| **வரிக்குப் பின்னரான இலாபம்/(நட்டம்)** | **3,413** | **2,280** | **3,451** | **2,297** |

| 30ம் திகதி செப்டெம்பர் மாதத்தில் உள்ளவாறான முக்கிய நிதித்தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது) | நிறுவனம் | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 30.09.2021 ரூ. (மில்லியன்) | 30.09.2020 ரூ. (மில்லியன்) | 30.09.2021 ரூ. (மில்லியன்) | 30.09.2020 ரூ. (மில்லியன்) |
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 11,653 | 9,676 | 11,856 | 9,911 |
| தொடர்பான தரப்பினரிடமிருந்து வர வேண்டியவை | 82 | 62 | 59 | 43 |
| கடன்கள் (தொடர்பான தரப்பினரிடமிருந்து வரவேண்டியவை நீங்கலாக) | 117,831 | 114,724 | 118,327 | 115,418 |
| பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள் | 603 | 600 | 82 | 79 |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் உடனான முதலீடுகள் | 3,758 | 12,469 | 3,758 | 12,469 |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் | 8,537 | 8,228 | 8,549 | 8,249 |
| ஏனைய சொத்துக்கள் | 964 | 1,183 | 969 | 1,192 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **143,428** | **146,942** | **143,600** | **147,361** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 17,702 | 22,390 | 17,746 | 22,505 |
| வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள் | 84,222 | 89,692 | 84,285 | 89,764 |
| ஏனைய கடன்கள் | 6,153 | 3,113 | 6,153 | 3,113 |
| ஏனைய பொறுப்புக்கள் | 5,969 | 6,456 | 5,983 | 6,480 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **114,046** | **121,651** | **114,167** | **121,862** |
| **பங்குரிமை மூலதனம்** | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 838 | 838 | 838 | 838 |
| நியதி ஒதுக்கு நிதியம் | 8,366 | 6,779 | 8,366 | 6,779 |
| பிடித்து வைக்கப்பட்ட வருமானங்கள் | 20,270 | 17,768 | 20,354 | 17,828 |
| ஏனைய ஒதுக்குகள் | (92) | (94) | (125) | 54 |
| **மொத்த மூலதனம்** | **29,382** | **25,291** | **29,433** | **25,499** |
| **மொத்த பொறுப்புக்களும் பங்குரிமை மூலதனமும்** | **143,428** | **146,942** | **143,600** | **147,361** |
| **பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூ.)** | **53.03** | **45.65** | **53.12** | **46.02** |

| தெரிவுசெய்யப்பட்ட முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் வகை | நிறுவனம் | | | |
|---|---|---|---|---|
| | 30.09.2021 | | 30.09.2020 | |
| | தேவையானது | உண்மை | தேவையானது | உண்மை |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)** | | | | |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம் | 8.00% | 21.48% | 7.00% | 19.12% |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 12.00% | 22.94% | 11.00% | 20.85% |
| வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம் | 10.00% | 34.89% | 10.00% | 28.20% |
| **கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)** | | | | |
| மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம் | | 6.65% | | 7.90% |
| தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | | 0.88% | | 2.91% |
| மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | | 4.30% | | 15.47% |
| ஒதுக்கு பாதுகாப்பு விகிதம் | | 86.81% | | 63.75% |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம் | | 12.76% | | 9.95% |
| சொத்துக்கள் மீதான வருமானம் | | 4.81% | | 4.50% |
| பங்குரிமை மூலதனம் மீதான வருமானம் | | 23.23% | | 18.03% |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | | 31.40% | | 34.91% |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%) | | 165.64% | | 326.43% |
| வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள் | | 13.73% | | 17.65% |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை (2020ல் 36 அடகு நிலையங்கள் உட்பட) | | 173 | | 166 |
| வெளிவாரி கொடுகடன் தரமிடல் (Fitch Ratings) | | A- (lka) | | A- (lka) |

கம்கனிக்கு 30ம் திகதி செப்டம்பர் மாதம் 2021 மற்றும் 2020 களில் வைப்புக்கள் கடன் பெறுதல் மற்றும் கடன் கொடுத்தல்கள் மீது எந்த விதமான சட்டரீதியான தண்ட பணம் செலுத்துகைகளோ அல்லது வரையறைகளோ இல்லை

**உறுதிப்படுத்தல்:**
எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி. இன் நிர்வாக இயக்குனர், தலைமை நிதி அதிகாரி மற்றும் இணக்க அலுவலர் ஆகிய நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக்குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி. இன் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

(ஒப்பமிடப்பட்டது)
ஜே. ஏ. எஸ். சுமித் ஆதிஹெட்டி
**நிர்வாக இயக்குனர்**
27 அக்டோபர் 2021

(ஒப்பமிடப்பட்டது)
மலித் ஹேவகே
**தலைமை நிதி அதிகாரி**
27 அக்டோபர் 2021

(ஒப்பமிடப்பட்டது)
செபஸ்தியான் புள்ளே
**இணக்க அலுவலர்**
27 அக்டோபர் 2021

LB FINANCE

எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி., 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. | துரித அழைப்பு : 0112 200 000 | www.lbfinance.com | LB Finance PLC

- ஃபிட்ச் ரேட்டிங்கில் நிலையான A -(lka) மதிப்பீடு
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் தொடர்ச்சியாக மூன்றாவது தடவை சிறந்த ஆண்டறிக்கைக்கான தங்க விருதினை வழங்கியுள்ளது.
- SLIM மக்கள் விருது வழங்குனரால் ஆண்டிற்கான சிறந்த மக்கள் நிதிச்சேவை வழங்குனர் விருது கிடைக்கப்பெற்றுள்ளது


இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தடைசெய்யப்பட்ட தமிழ் புலம்பெயர் அமைப்புகளுடனும் பேசுவது அவசியம்

## -வலியுறுத்தும் மஹிந்த சமரசிங்க-



புலம்பெயர் தமிழ் அமைப்புகளை மட்டுமல்ல சிங்கள, முஸ்லிம் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தடை செய்யப்பட்ட தமிழ் புலம்பெயர் அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமே அவர்களின் நிலைப்பாடு என்னவென்பது தெரிந்துகொள்ள முடியும் எனவும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுடனும் இதற்கு முன்னரான காலகட்டத்தில் இருந்து நெருக்கமாக நான் செயற்பட்டுள்ளேன். யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர இந்த இருவரும் எவ்வாறு செயற்பட்டனர் என்பதை நான் நேரடியாக பார்த்த நபர். இவர்கள் இருவரும் இல்லையென்றால் இன்று யுத்தம் முடிவுக்கு வந்திருக்காது.

இன்று கொவிட் குறித்து பேசுகின்றோம். அன்று விடுதலைப் புலிகளை அழிக்காது, பிரபாகரனை அழிக்காது விட்டுவைத்திருந்தால் இன்று நாடு இரண்டாக பிளவுபட்டிருக்கும். அதற்கு இடமளிக்காது தடுத்து நிறுத்திய தலைமைத்துவம் அவர்களை சார்ந்தது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றும் வேளையில் வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் அமைப்புகளுக்கு தான் அழைப்பு விடுப்பதாக கூறினார். தன்னுடன் பேச்சுவார்த்தைக்கு வருமாறு கூறினார்.

இதன்போது தடைசெய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளை சந்திக்க மாட்டேன். அங்கீகரிக்கப்பட்ட புலம்பெயர் அமைப்புகளை மட்டுமே நான் சந்திப்பேன் என எதுவும் கூறவில்லை. ஒட்டுமொத்த புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவதற்கு தயார் என்பதையே அவர் கூறினார்.

தமிழ் புலம்பெயர் அமைப்புகள் மட்டுமல்ல, சிங்கள, முஸ்லிம் புலம்பெயர் அமைப்புகளும் உள்ளன. அவர்களும் பாரிய செல்வந்த நிலையில் உள்ளனர். அவர்கள் இன்றும் நாட்டை நேசிக்கின்றனர். அவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல் தடைசெய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், அப்போதுதான் அவர்களின் நிலைப்படும் என்னவென்பது தெரியும். குறிப்பிட்ட மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்த வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டும். இது நல்லதொரு செய்தியாகும் என்றார்.

## மட்டு. கடலில் படகு கவிழ்ந்ததில் மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார்

மட்டக்களப்பு முகத்துவாரம் கடல் பகுதியில் படகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவர் படகு கவிழ்ந்ததில் கடலில் வீழந்து காணாமல் போயுள்ள சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதுடன் படகு செட்டிபாளையம் கடல் கரையில் கரை ஒதுங்கியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு திரைய்மடு சுவீஸ் கிராமத்தைச் சேர்ந்த 50 வயதுடைய சுந்தரராஜா சுரேஸ் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த மீனவர் சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இயந்திர படகில் தனியாக முகத்துவாரம் கடலில் மீன்பிடிப்பதற்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கடலில் இருந்து வலையை இழுக்கும் போது படகு கவிழ்ந்ததையடுத்து அவர்கடலில் வீழ்ந்து காணாமல் போயுள்ளார்.

இதேவேளை கவிழ்ந்த படகு செட்டிப்பாளையம் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளதாகவும் காணாமல் போனவரை கடற்படையினர் தேடிவருகின்றனர்.



## மின்னழுத்த கம்பத்தில் மோதி தீப்பற்றி எரிந்த தாங்கி ஊர்தி



கொட்டாவ - அதுருகிரிய வீதியில் வார சந்தைக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு சீமெந்து ஏற்றிச் சென்ற தாங்கி ஊர்தியொன்று வீதியை விட்டு விலகி இரண்டு தடுப்பு சுவர்கள் மற்றும் உயர் மின்னழுத்தக் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

உயர் மின்னழுத்த கம்பத்தில் குறித்த வாகனம் மோதியதில், மின்கம்பம் மற்றும் மின்கம்பிகள் அவ்வாகனத்தின் முன்பகுதியில் விழுந்ததில் அப்பகுதி முற்றாக தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

தீயை அணைக்க ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் இரண்டு தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

அத்துடன், மின்சார சபை ஊழியர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து மின்கம்பங்கள் மற்றும் கம்பிகளை அகற்றியதையடுத்து, வீதியை விட்டு விலகியிருந்த தாங்கி மற்றும் வாகனத்தின் முன்பகுதி கிரேன் உதவியுடன் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த விபத்தினால் குறித்த பிரதேசத்துக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதுடன் தொலைபேசி கட்டமைப்பும் செயலிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் தாங்கி ஊர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தக் பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## ஹோமாகம பொடி சம்பத் கைது

பாதாள உலக உறுப்பினரான கிம்புல எல குணாவின் உதவியாளர் எனக்கூறப்படும் ஹோமாகம பொடி சம்பத் என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, அவரிடமிருந்து 5 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரால் தேடப்பட்டுவந்த குறித்த சந்தேகநபர், கெஸ்பேவ பிரதேசத்தில் வைத்து இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## 3 தேங்காய்கள் திருடிய மூவருக்கு 2 இலட்சம் ரூபா பிணையில் விடுவிப்பு

காலி, வகுனகொட பிரதேசத்தில் தனியார் காணியொன்றில் மூன்று தேங்காய்களை பறித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் காலி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் 200,000 ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்குமாறு பிரதம நீதவான் ஹர்ஷன கெகுனவெல உத்தரவிட்டுள்ளார்.

சிறுமி ஒருவரும் காலியைச் சேர்ந்த இருவருமே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிக்கடி திருடர்கள் நடமாடுவதால், தென்னந்தோப்பு உரிமையாளர் தனக்கு சொந்தமான ஒன்றரை ஏக்கர் பரப்பைக் கொண்ட தோப்பில் சிசிரிவி கெமராவை பொருத்தியுள்ளார்.

சிசிடிவி காட்சிகள் மூலம் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொரோனா பரிசோதனைகள் தற்காலிகமாக நிறுத்தம்

கொரோனாத் தொற்றினைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறை தொழில் வல்லுநர்கள் சம்மேளனத்தின் சுகாதார சேவையாளர்கள் இரண்டு நாட்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

அதன் அடிப்படையில் இரண்டு நாட்களும் கொரோனா தொடர்பிலான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னாரில் 23 நாட்களில் 470 தொற்றாளர்கள் அடையாளம்

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில் கடந்த 23 நாட்களில் 470 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட கொரோனா நிலவரம் தொடர்பாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் நேற்று புதன்கிழமை விடுத்துள்ள கொரோனா நிலவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், 'மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் புதிதாக 14 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை 470 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடம் 2846 தொற்றாளர்களும்,மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 2863 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் தற்போது வரை 25 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளது.என குறிப்பிடப்பட்டுள்ளது.

YMCA YOUNG MEN'S CHRISTIAN ASSOCIATION - JAFFNA

**வேலை வாய்ப்பு**

யாழ் வை.எம்.சீ.ஏ. நிறுவனத்திற்கு வரவேற்பு கடமையாளராக ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. விண்ணப்பங்களை எதிர்வரும் 01.12.2021க்கு முன்னதாக பொதுச்செயலாளர், வை.எம்.சீ.ஏ, 109,கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பொதுச்செயலாளர்

**பருத்தித்துறை நகரசபை**
**மீள்கேள்வி அறிவித்தல்-2022**

மீன் சந்தை, ஆட்டிறச்சிக்கடை, மாட்டிறைச்சிக்கடை ஆகியவற்றுக்கான குத்தகை
மீள்கேள்வி அறிவித்தல்

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்கான குத்தகை கேள்விகள் கீழ்க் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 08.12.2021 பி.ப. 02.30 மணி
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 09.12.2021 பி.ப. 02.30 மணி
கேள்வி திறக்கப்படும் திகதி : 09.12.2021 பி.ப. 02.30 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் : பருத்தித்துறை நகரசபை அலுவலகம்.

| தொ. இல | குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரிகள் நீங்கலாக) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப் படிவக் கட்டணம் (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | மீன் சந்தை | 3,371,000.00 | 20,000,00 | 1,000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக் கடை | 62,100.00 | 5,000.00 | 1,000.00 |
| 03 | மாட்டிறைச்சிக் கடை | 2,411,140.00 | 20,000.00 | 1,000.00 |

1. விண்ணப்ப படிவங்களினை 25.11.2021 தொடக்கம் 08.12.2021 திகதி பி.ப.2.30 மணி வரை அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. ஏனைய விபரங்களை 03.11.2021 ஆந் திகதிய தினக்குரல் மற்றும் காலைக்கதிர் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பருத்தித்துறை நகரசபையின் கேள்வி அறிவித்தல் 2022 இல் பார்வையிடவும்.
3. மேலதிக விபரங்கள் மற்றும் 2022 மீள்கேள்வி அறிவித்தல் நிபந்தனை கையேட்டினை அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.யோசேப்பு இருதயராசா,
தவிசாளர்,
பருத்தித்துறை நகரசபை.

திகதி- 25.11.2021

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திரு.நாகப்பர் கந்ததாசன்**
கிளிநொச்சி வடக்கு
(வலயக்கல்விப் பணிப்பாளர்)

எமது நிலைய உறுப்பினர்
திரு.நாகப்பர் கந்ததாசன் அவர்கள்
கிளிநொச்சி வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றமையினைப் பாராட்டி வாழ்த்துவதில் அகமிக மகிழ்வதுடன் மேலும் உயர்வு பெற்று உரிய சேவைகளை ஆற்றுவதற்கு எல்லாம் வல்ல இறைவனருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
வாழ்க வளமுடன்

மேலைப்புலோலி கதிரைவேற்பிள்ளை
சனசமூக நிலையத்தினர்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**செல்வி மாதுமை சுவேந்தன்**



எமது பாடசாலையில் கல்வி கற்கும் செல்வி மாதுமை சுவேந்தன் அவர்கள் 2020 நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் முதன் நிலை பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 22.11.2021ஆம் திகதியன்று கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கௌரவிக்கப்பட்டார். இம்மாணவி மென்மேலும் பல சிறப்புகளைப் பெற்று உயர்நிலை பெற வாழ்த்துகிறோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை,
பருத்தித்துறை.

# தனது தனிப்பட்ட சட்டத்தரணிகளை கொண்டு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் கோட்டா

## -பயனற்றது என்கிறார் லக்ஸ்மன் கிரியெல்ல-



ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச தனது தனிப்பட்ட சட்டத்தரணிகளை வைத்து புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி வருகின்றார் என்று எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நல்லாட்சியில் சுயாதீனமாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் அனைத்தும் இன்று 20 ஆம் திருத்தத்தின் மூலமாக அதன் சுயாதீனத்தை இழந்துள்ளது. நிறைவேற்று அதிகாரத்தின் மூலமாக இவை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எமது ஆட்சியில் ஜனாதிபதியின் கோரிக்கையை கூட நிராகரிக்கும் அதிகாரம் சுயாதீன ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டது.

ஆனால் இன்று அதன் சுயாதீனம் அழிக்கப்பட்டுள்ளது. அன்று சந்திரிக்கா குமாரதுங்கவின் ஆட்சியில் ஜே.வி.பி வலியுறுத்தியதற்கு அமைய இவை உருவாக்கப்பட்டன, இன்று அதன் நிலைமை மோசமாகியுள்ளது. சுயாதீன நீதிமன்றம் இல்லாத காரணத்தினால் இன்று முதலீட்டாளர்கள் நாட்டிற்கு வர விரும்பவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முதற்கொண்டு 20 ஆம் திருத்தத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ளனர். இது இலங்கையின் நற்பெயருக்கு பாரிய களங்கமாகும்.

எமது அரசாங்கத்தில் 19 ஆம் திருத்தத்தை உருவாக்கி நீதிமன்ற சுயாதீனத்தை உறுதிப்படுத்தினோம். அரச அதிகாரத்திற்கு நாம் அடிபணியவில்லை. இன்று 20 ஆம் திருத்தத்தில் பல குறைபாடுகள் இருந்தும் எவ்வாறு நீங்கள் இதற்கு ஆதரவு வழங்கினீர்கள் என்ற கேள்வி எம்மத்தியில் உள்ளது.

அதிகார பரவலாக்கல் இல்லையென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது. எனவே புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்திலேனும் இவற்றை உறுதிப்படுத்துங்கள். இன்று புதிய அரசியல் அமைப்பு குறித்து பேசுகின்றனர். நாம் இன்னும் அதன் நகலை கூட பார்க்கவில்லை. புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் சகல கட்சிகளின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான தெரிவுக்குழு உருவாக்கப்பட வேண்டும். இதற்கு முன்னர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இது இடம்பெற்றது.

இன்று ஜனாதிபதி என்ன செய்கின்றார். தனது தனிப்பட்ட சட்டத்தரணிகளை கொண்டு அரசியல் அமைப்பை உருவாக்குகின்றார். இவ்வாறு செய்யப்பட்டால் இந்த அரசியல் அமைப்பையும் வர்த்தமானிகள் போன்று மீளப்பெற்றுக்கொள்ள வேண்டிவரும் என்றார்.

# 'ஒரு நாடு ஒரு சட்டம்' -நாட்டை மோசமான அழிவுப்பாதைக்கே இட்டுச்செல்லும்

## -எச்சரிக்கும் வேலுகுமார்-

இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை இல்லாமல் செய்யும் நடவடிக்கையே ஒருநாடு ஒரு சட்டம். இது நாட்டை மோசமான அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும் என எம் வேலுகுமார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஜனாதிபதி புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தப்போவதாக தெரிவித்து இரசாயன உரத்தை ஒரே இரவில் வர்த்தமானியில் வெளியிட்டு தடைசெய்தார். பின்னர் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளை உணர்ந்து அந்த வர்த்தமானி அறிவிப்பை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

அதேபோன்று நாட்டில் தேர்தல் சட்டத்தை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொகுதிவாரி தேர்தல் முறையை ஏற்படுத்தி சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை இல்லாமலாக்கவே நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அதேபோன்று ஒரே நாடு ஒரே சட்டம் நாட்டை மோசமான அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும். கடந்த காலங்களில் இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்திய ரிடமே ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி ஒப்படைக்கப்பட்டுள்ளது இதனை நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் முற்றாக எதிர்க்கின்றார்கள்.

இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டுமே தவிர இத்தகைய செயற்பாடுகளால் இனங்களுக்கிடையில் பிளவுகள் ஏற்படுத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும் 2009க்கு முன்னர் வடக்கு தெற்கு பிளவுபட்டே இருந்தது. என்றாலும் அதன் பின்னர் வடக்கு தெற்கை ஒன்றிணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் பூமியை ஒன்றிணைக்க முடிந்தாலும் இன, மத,சமூக ரீதியில் மக்கள் மனதை வெற்றி கொள்ள முடியாமல் போயுள்ளதை குறிப்பிட வேண்டும்.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் இனங்களுக்கிடையே ஒற்றுமையை கட்டியெழுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது அந்த அடிப்படையே சீர்குலைந்து இனங்களுக்கிடையில் பிளவுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

நாட்டில் அறிமுகப்படுத்தப்படும் தேர்தல் முறைமை அனைத்து இன, மத மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும். என்றார்.

# மேல் மாகாணத்தில் திடீர் சோதனை

பொது மக்கள் முறையாக கொவிட்-19 சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுகின்றனரா என்பதை கண்டறியும் விசேட பொலிஸ் நடவடிக்கையில் நேற்று முன்தினம் மேல் மாகாணத்தில் மொத்தம் 23,193 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும் பொலிஸாரின் இந்த சிறப்பு நடவடிக்கை மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த பணியில் 1,475 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பங்கெடுத்தனர். இதன் போது 6,324 நபர்கள் எச்சரிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், முகக் கவசங்களை அணியாத 4,351 பேருக்கு பொலிஸார் முகக் கவசங்களை வழங்கி வைத்தனர். மேலும் 7,105 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 918 முச்சக்கர வண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

முறையாக சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாத நபர்களுக்கு எதிராக பொலிஸார் விசேட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். அதன் ஆரம்ப கட்டமாக மேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு விசேட பொலிஸ் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



# ஈஸ்டர் தாக்குதல் வழக்கு ஒத்திவைப்பு

ஈஸ்டர் தீவிரவாத தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பில் பிரதிவாதிகள் 25 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை, கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இந்த வழக்கு நீதியரசர்களான தமித் தோட்டவத்த, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகியோரடங்கிய தீர்ப்பாயம் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதன்போது நவ்பர் மௌலவி உள்ளிட்ட பிரதிவாதிகளை சிறைச்சாலை அதிகாரிகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

நௌபர் மௌலவி, சஜித் மௌலவி, மொஹமட் மில்ஹான், சாதிக் அப்துல்லா, ஆதம் லெப்பை, மொஹமட் சனாஸ்தீன் மற்றும் மொஹமட் ரிஸ்வான் உட்பட 25 பிரதிவாதிகளுக்கு எதிராக 23,270 குற்றச்சாட்டுகள் முன்னர் தாக்கல் செய்யப்பட்டதுடன், ஒக்டோபர் 4ஆம் திகதி குற்றப்பத்திரிகையும் வாசிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளில் கொலைக்கு சதி செய்தல், உதவி செய்தல், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை சேகரித்தல் மற்றும் கொலை முயற்சி ஆகியவை அடங்குகின்றன.

ஐ.எஸ்.ஐ.எஸ் உடன் தொடர்புடைய உள்ளூர் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான தேசிய தௌஹீத் ஜமாத்தைச் சேர்ந்த ஒன்பது தற்கொலை குண்டுதாரிகள், இலங்கையின் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தன்று நடத்திய தொடர் குண்டுவெடிப்பில் 270 பேர் கொல்லப்பட்டதுடன், 500 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் ஏற்றுமதி வருமானம் 52.2 வீதமாக அதிகரிப்பு

நாட்டின் ஏற்றுமதி வருமானம் ஓராண்டு காலத்திற்குள் 52.2 சதவீதமாக அதிகரித்துள்ளதாக சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி 248.8 பில்லியன் ரூபாய்களாக இருந்த நாட்டின் ஏற்றுமதி வருமானம் - ஒக்டோபர் 2020 முதல் ஒக்டோபர் 2021 வரையான ஒரு ஆண்டு காலத்திற்குள் - 52.2 வீதம் அதிகரித்து, 332.9 பில்லியன்கள் ஆகியுள்ளது என சுங்கத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

# நெடுஞ்சாலை கட்டணங்கள் மொபைல் ஊடாகவே கட்டலாம்

நெடுஞ்சாலைகள் அல்லது அதிவேக நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தும் ஓட்டுநர்கள் எதிர்காலத்தில் 'LANKAQR' செயலியில் உள்ள மொபைல் கட்டணச் செயலி மூலம் QR குறியீட்டை ஸ்கேன் செய்வதனூடாக பணம் செலுத்த முடியும்.

மேற்படி கட்டண முறையை நடைமுறைப் படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டதும், சாரிகள் நெடுஞ்சாலையின் கட்டணம் செலுத்தும் வாயிலில் உள்ள LANKAQR செயலியில் உள்ள மொபைல் பேமெண்ட் செயலி மூலம் QR குறியீட்டை ஸ்கேன் செய்வதனூடாக 8-10 வினாடிகளுக்குள் செலுத்த வேண்டிய தொகையை செலுத்த முடியும்.



# முகக்கவசம் அணியாதவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

நாட்டில் சுகாதார வழிமுறைகளின் படி முறையாக முகக்கவசம் அணியாத நபர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் முறையாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது கட்டாயமாகும்.

கொவிட் பரவல் நிலை மேல் மாகாணத்தில் உள்ள மக்களின் செயற்பாடுகளில் அதிகரித்தமையை காணக்கூடியதாக உள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், மேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு விசேட பொலிஸ் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# ஒரு நாளில் 59,921 பேருக்கு தடுப்பூசி

நாட்டில் நேற்று முன்தினத்தில் மட்டும் 59,921 பேருக்கு அனுமதியளிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 854 பேருக்கு சைனோபார்ம் முதலாவது டோசும், 3,249 பேருக்கு இரண்டாவது டோசும், 1,286 பேருக்கு பைசர் முதலாவது டோசும், 873 பேருக்கு இரண்டாவது டோசும், 53,664 பேருக்கு மூன்றாவது டோசும், 4 பேருக்கு மொடர்னா இரண்டாவது டோசும் வழங்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் பலத்த மழை; முறிந்து விழுந்த மரம்



கிழக்கு மாகாணத்தில் நேற்று பெய்த பலத்த மழை காரணமாக , அக்கரைப்பற்று- நிந்தவூர் பிரதான வீதி, அனல் மின்சார நிலையத்துக்கு அருகாமையில் இருந்த பல வருடங்கள் பழைமையான பெரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

தற்போது, இவ்வீதியால் பயணிப்போருக்கான வாகனப் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேருந்துடன் மோதி ஒருவர் பலி

களுத்துறை வடக்கு, தொட்டுபல சந்தியில் பேருந்துடன் மோதி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கம்பஹா, அஸ்கிரிய பகுதியை சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து இடம் பெறும் விதம் அருகில் இருந்தCCTV யில் பதிவாகியிருந்தது.

கொழும்பில் இருந்து அம்பலாங்கொட நோக்கி பயணித்த பேருந்து ஒன்றுடன் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# புதையல் தோண்டிய நால்வர் கைது

புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நால்வரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலனறுவை, அரலங்கவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேஹெரகமவில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த 21, 26, 38, 59 வயதுகளையுடையவர்களே நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் மீண்டும் தொடரும் சீரற்ற காலநிலையை அடுத்து இரண்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மன்னம்பிட்டிய விபத்தில் இருவர் உயிரிழப்பு

பொலன்னறுவை - மட்டக்களப்பு வீதியில் மன்னம்பிட்டி, ஆச்சி போக்குவ பகுதியில் நேற்று புதன்கிழமை காலை டிப்பரொன்றும், முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதியும் அதில் பயணித்த நபருமாக இருவர் உயிரிழந்துள்ளனர்.

படுகாயமடைந்த பெண் பொலன்னறுவை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதுடன், டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்தனர்.

# இடைத் தேர்தல் தோல்வியின் எதிரொலி; ஹிமாலாயாவில் ஆட்டம் காணும் பா.ஜ.க

## ஹிமாச்சல் பிரதேசத்தில் பாரதிய ஜனதா கட்சியில் அதிருப்திக் குரல் பகிரங்கமாக வெடித்துள்ளது



ஹிமாச்சலப் பிரதேச பாஜகவின் மாநில துணைத் தலைவர் கிரிபால் பார்மர் தமது கட்சிப் பதவியை ராஜினாமா செய்துள்ளார். அவரைத் தொடர்ந்து மேலும் பலர் பாஜகவின் கட்சிப் பதவிகளை ராஜினாமா செய்யக்கூடுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் நாடு முழுவதும் 14 மாநிலங்களில் 3 லோக்சபா தொகுதிகள், மற்றும் 29 சட்டசபை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. ஹிமாச்சலப் பிரதேசத்தின் மண்டி லோக்சபா தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடந்தது. இதில் ஆளும் பாரதீய ஜனாதா கட்சி தோற்கடிக்கப்பட்டு, காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது.

அதேபோல, ஹிமாச்சல் பிரதேசத்தின் பதேபுர், அர்க்கி, ஜூப்பாய் சட்டசபை தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த 3 தொகுதிகளிலும் பாஜகவை காங்கிரஸ் தோற்கடித்து அதிர்ச்சியளித்தது.

ஜூப்பாய் தொகுதியில் பாஜக வேட்பாளர் கட்டுப்பணத்தையும் இழந்தார். இதனால் அப்போதே, முதல்வர் ஜெய்ராம் தாக்கூர் மாற்றப்படுவாரெனக் கூறப்பட்டது.

இத்தனைக்கும் முதல்வர் தாக்கூரின் சொந்த இடமான மண்டித் தொகுதியில் தான் இத்தோல்வி ஏற்பட்டது. ஹிமாச்சல் பிரதேசத்தில் அடுத்த ஆண்டின் இறுதியில் சட்டசபைச் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், ஆளும் பாஜக படுதோல்வி அடைந்திருப்பதை, அக்கட்சி மேலிடத்தால் ஜீரணிக்க முடியாத நிலையில், ஹிமாச்சல் பிரதேச மாநில பாஜக செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

பாஜக எம்.எல்.ஏக்களின் கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில், மாநில பாஜக துணைத் தலைவர் கிரிபால் பார்மர், தமது கட்சிப் பதவியை ராஜினாமா செய்துள்ளார். பாஜக தேசியத் தலைவர் ஜே.பி.நட்டாவுக்கு மிக நெருக்கமான தலைவர் கிரிபார் பர்மா. ராஜ்யசபா எம்.பி.யாகவும் இருந்தவர்.

அத்துடன் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும் எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் முதல்வர் ஜெய்ராம் தாக்கூர் மாற்றப்படுவதற்கான சாத்தியங்களும் இருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குஜராத், உத்தரகாண்ட், கர்நாடகா மாநிலங்களில் மாநில முதல்வர்களை பாஜக மாற்றியது. தற்போது இந்த வரிசையில் ஹிமாச்சல் பிரதேச மாநிலமும் இணையக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## இரண்டு கோடிக்கும் அதிகமான பணத்துடன் சிக்கிய பெண் அரச அதிகாரி



ஓசூரில் 2.27 கோடி ரூபா சிக்கிய அதிகாரி மீது நடவடிக்கை எடுக்காமல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை, அதிகாரிகளின் மெத்தன நடவடிக்கையைக் காட்டுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதே நேரம் மாநில அரசிற்குத் தெரியாமல்லஞ்ச ஒழிப்புத் துறையினர் சோதனை நடத்தி பணத்தைக் கைப்பற்றியதாகவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஓசூர் நேரு நகரில் வசித்து வரும் ஷோபனா வேலூர் கோட்ட பொதுப் பணித்துறை தொழில்நுட்ப கல்வி பிரிவு செயலாளராக பணியாற்றி வந்தார். ஒப்பந்ததாரர்களிடம் அதிகளவில் லஞ்சம் வாங்கி வருவதாக கிடைத்த புகாரின் அடிப்படையில், அலுவலக வளாகத்தில் உள்ள அவரது அறை, மற்றும் ஓசூரில் உள்ள வீட்டில் லஞ்ச ஒழிப்பு பொலிஸார் சோதனை செய்தனர்.

கணக்கில் வராத 2 கோடியே 27 லட்சத்து 75 ஆயிரத்து 300 ரூபா மற்றும் 35 பவுண் தங்க நகை ஒரு கிலோ வெள்ளி 27 லட்சத்து 98 ஆயிரம் மதிப்பிலான நிரந்தர டெபாசிட் ஆவணங்கள் பினாமி பெயரில் இருந்த 14 சொத்து ஆவணங்கள் ஒரு வங்கி லாக்கர் சாவி 11 வங்கிக் கணக்கு விபரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

லஞ்ச ஒழிப்பு சோதனை நடத்தி, கணக்கில் வராத பணத்தைக் கைப்பற்றி அரசு அதிகாரி மீது அறிக்கை வழங்கினால், சம்பந்தப்பட்ட அதிகாரியின் பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வும் நிறுத்தப்படும். வழக்கு நிறைவடையாமல், பணியிலிருந்து ஓய்வு பெறக்கூட முடியாது.

ஆனால், வழக்கத்திற்கு மாறாக 2.27 கோடியுடன் சிக்கிய ஷோபனாவிற்கு திருச்சி மண்டல பொதுப்பணித்துறை துணைக் கண்காணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். போக்குவரத்து சோதனைச்சாவடிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் கணக்கில் வராத பணத்தை லஞ்ச ஒழிப்பு பொலிஸார் கைப்பற்றி சம்பந்தப்பட்டவர்கள் மீது, அறிக்கை யளித்துள்ளனர்.

ஆனால், ஷோபனா வீட்டில் கட்டுக்கட்டாக பணம் கைபற்றப்பட்ட பின்னரும் கூட, முறையாக துறைரீதியான விசாரணை நடத்தாமலும், அவர் மீது நடவடிக்கை எடுக்காமலும், இடமாற்றம் மட்டும் செய்திருப்பது, பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

## போயஸ்கார்டன் இல்லத்தை அரசுடமையாக்கிய சட்டம் ரத்து

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்லமான வேதா நிலையத்தை அரசுடைமையாக்கிய சட்டம் ரத்துச் செய்யப்படுவதாக உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும், வேதா நிலையத்தின் சாவியை 3 வாரத்தில் மனுதாரர்களிடம் ஒப்படைக்கும்படி சென்னை மாவட்ட ஆட்சியாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

வேதா நிலையத்துக்கு இழப்பீடாக செலுத்தப்பட்ட 67 கோடியே 90 லட்சம் ரூபாவை மாநில அரசிடம் திருப்பி வழங்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஜெயலலிதாவுக்கு வேதா நிலையம், பீனிக்ஸ் நினைவிடமென இரண்டு நினைவிடங்கள் எதற்கெனவும் நீதிபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

## 100 கோடிக்கும் மேற்பட்ட சொத்துக்கள் குஜராத்தில் கண்டுபிடிப்பு!

குஜராத் மாநிலம் அகமதாபாத்திலுள்ள குட்கா விநியோகஸ்தரின் வீடு உள்ளிட்ட அவருக்கு சொந்தமான 15 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில், 100 கோடிக்கும் மேற்பட்ட கணக்கில் வராத சொத்துக்கள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது, சுமார் ஏழரைக் கோடி ரூபா ரொக்கப்பணமும், நான்கு கோடி ரூபா மதிப்புள்ள நகைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இதுகுறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் நிலையில், குறித்த நிறுவனத்தின் வங்கி லொக்கருக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் பூஸ்டர் டோஸ்களுக்கு விரைவில் அனுமதி

இந்தியாவில் பூஸ்டர் கொரோனா டோஸ்களுக்கு விரைவில் அனுமதி அளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அனைத்து ஆராய்ச்சி முடிவுகள் வெளியாகிய பினனர், இது குறித்து முடிவெடுக்கப்படுமென கொரோனா டாஸ்க் ஃபோர்ஸ் தலைவர் டாக்டர் விகே பால் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இதுவரை 1,18,47,97,137 டோஸ்கள் கொரோனா தடுப்புசிகள் வழங்கப்பட்டுள்ளன. 77,25,86,570 பேருக்கு இந்தியாவில் ஒரு டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. 41,22,10,567 பேருக்கு இரண்டு டோஸ் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தான், இந்தியாவில் விரைவில் மூன்று டோஸ் செலுத்துவது குறித்த கட்டாயச் சட்டம் கொண்டு வரப்படலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட வயதினருக்கு, மூன்று டோஸ் தடுப்பூசிகள் பெற்றுக் கொள்வது கட்டாயமெனும் விதிமுறை, கொண்டு வரப்படலாமெனக் கூறப்படுகின்றது.

அதாவது நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு மட்டும், மூன்றாம் டோஸ் பரிந்துரைக்கப்படுமெனக் கூறப்படுகின்றது. இதற்காக இந்தியாவின் கொரோனா தடுப்பூசி ஆய்வுக்குழு ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றது.

## பருவ மழையின் தாக்கம் குறித்து முதல்வர் ஸ்டாலின் தலைமையில் கலந்துரையாடல்



மத்திய உள்துறை இணை செயலாளர் ராஜிவ் சர்மா தலைமையிலான குழுவினர் நேற்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து பேசினர்.

வடகிழக்கு பருவமழை ஆரம்பித்தது முதல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மிகப் பலத்த குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கன்னியாகுமரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் பெய்த கனமழையால் சாலை எங்கும் மழைநீர் தேங்கியது.

விவசாய நிலங்களில் வெள்ளம் சூழ்ந்தமையினால், பயிர்கள் அழுகின. இதையடுத்து, தமிழகத்திற்கு விரைந்த மத்திய குழுவினர் இரண்டு பிரிவாகப் பிரிந்து கடந்த 3 நாட்களாக மழை வெள்ளத்தினால், பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

இதன் பின்னர் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து தமிழகத்தில் மேற்கொண்ட ஆய்வு குறித்து மத்தியக் குழுவினர் முதல்வரிடம் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

## கொரோனா 3 வது அலை குறித்து மருத்துவ நிபுணர்களின் நம்பிக்கை தரும் கணிப்பு

இந்தியாவில், கொரோனா 2-வது அலை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில், 3-வது அலை, கடந்த அக்டோபர் அல்லது இந்த மாதத்தில் உச்சத்தை தொடுமென பெரும்பாலான தொற்றுநோய் நிபுணர்கள் கணித்திருந்தனர். தசரா பண்டிகை, தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகள் கொண்டாடப்படுவதனால், 3-வது அலை உருவெடுக்குமென அவர்கள் கருதினர்.


ஆனால், அவர்களின் கணிப்புகள் பொய்த்துப் போயுள்ளன. தீபாவளி முடிந்து 3 வாரங்கள் நிறைவடையும் நிலையில் இருப்பினும், நாடு முழுவதும் தினசரிப் பாதிப்பு குறைந்து வருகின்றது.

எனவே, கொரோனாவின் மோசமான காலகட்டத்திலிருந்து இந்தியா விடுபட்டுள்ளதாக கருதப்படுகின்றது. இது குறித்து ஹரியானா மாநிலம் சோனிபட்டில் உள்ள அசோகா பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரின் கருத்தின் அடிப்படையில்,

கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சைபெற்று குணமடைந்தவர்களுக்கு இயல்பான நோய் எதிர்ப்புச் சக்தி கிடைத்தது. பின்னர் தடுப்பூசி போட்டுக் கொண்டதனால், ஹைபிரிட் இம்யூனிட்டி எனப்படும் கலப்பு நோய் எதிர்ப்புச் சக்தி கிடைத்தது.

கொரோனா தாக்காதவர்கள், தடுப்பூசி பெற்றுக் கொண்டமையினால் அவர்கள் பெற்றுக் கொண்ட நோய் எதிர்ப்பு சக்தியை விட இவர்களுக்கு கிடைத்த நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகும். அத்துடன், தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து இருப்பதனால், தினசரிப் பாதிப்பு குறைவாகவேயுள்ளது.

கொரோனா 3-வது அலை உருவாகுமா என்பதை கணிக்க முடியாதெனினும், அப்படி வந்தாலும், 2-வது அலை போன்று மோசமானதாக இருக்காது. குளிர்காலம் ஆரம்பித்துள்ள நிலையில் டிசம்பர், ஜனவரி மாதங்களில் கொரோனாப் பாதிப்பு அதிகரிக்கலாம். எனவே, எல்லோரும் உஷாராக இருக்கவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.



SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1572
நிறம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 2021.11.23
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
F 35 52 63 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 2,847,720/-
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.11.23
சீட்டிழுப்பு இல: 3733
வர்ணம்: இளநீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,534,360/-
வெற்றி இலக்கங்கள்
08 42 53 58
ஆங்கில எழுத்து Q
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1398
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2021.11.23
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,307,040/-
வெற்றி இலக்கங்கள்
01 14 35 48
ஆங்கில எழுத்து X
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி : 2021-11-23
வெற்றி வாரம் : 3284
வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வெற்றி இலக்கங்கள்
20 23 24 58
மிதுனம்
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,521,180/-

கோடீஸ்வர கப்ருக
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
F 06 18 46 54
சீட்டிழுப்பு வாரம் 769
வர்ணம் இளஞ்சிவப்பு
திகதி 2021. 11. 23
செவ்வாய்க்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,435,000/-
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,907,655/-
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

# தலிபான்களின் அராஜக ஆட்சியில் பட்டினியால் தவிக்கும் குழந்தைகள்





ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றி 100 நாட்களையும் கடந்துள்ளது. இந்த 100 நாட்களும் ஆப்கான் மக்களின் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதாக அந்நாட்டு மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஓகஸ்ட் மாதம் 15-ம் திகதி தலிபான்கள் ஆட்சியமைத்தனர். இதனால், அங்கிருந்த மக்கள் புலம்பெயர்ந்து வேறு நாடுகளுக்குச் சென்றனர்.

மேலும் சில பொது மக்கள், செல்வதற்கு வழியில்லாமல் அங்கேயே சிக்கிக் கொண்டனர். ஆரம்பத்தில் அதிகமாகப் பேசப்பட்ட இந்தச் சர்ச்சை தற்போது எங்கு சென்றது என்றே தெரியவில்லை. இந்த நிலையில், இன்றோடு தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றி 100 நாட்கள் கடந்த நிலையில், அங்கு நடக்கும் கொடுமைகள் குறித்து ஆப்கான் மக்கள் வேதனை தெரிவித்தனர்.

அந்த வகையில், சார்குனா என்ற 35 வயது பெண் அவரது கஷ்டங்களை புலம்பி அழுதுள்ளார். அங்கு தினமும் ஒரு வேளை சாப்பிடுவதற்கு கூட, வழியில்லையெனவும், தன்னுடைய இரண்டு குழந்தைகளும் பசியால் துடிப்பதாகவும், வேதனை தெரிவித்துள்ளார்.

மேலும், அவர்களுக்கு தினமும் ஒரு வேளை சாப்பாடு அல்லது பாண் மட்டுமே கிடைப்பதாகவும், சில சமயங்களில் எதுவுமே கிடைக்காத நிலையில், சாப்பிடாமல் தூங்குவதாகவும் கூறியுள்ளார். கடும் பசியில் பச்சை மாவை அள்ளி உண்டதாகவும், இந்த நிலை தொடர்ந்தால், கண்டிப்பாக அனைவரும் பசியால் இறந்து விடுவதாகவும், அவர் கூறியுள்ளார்.

## நீண்ட காலம் அமுலில் இருந்த கனடாவின் சர்ச்சைக்குரிய கொள்கைத் திட்டம் முடிவுக்கு



கொவிட் தொற்றுநோய் நெருக்கடியையடுத்து, புகலிடக் கோரிக்கையாளர்களை எல்லையிலேயே வைத்து திருப்பியனுப்பும் வகையில்,கனடா முன்னெடுத்து வந்த கொள்கைத் திட்டம் முடிவுக்கு வருகின்றது.

புதுப்பிக்கப்பட்ட கனடாவில், கொவிட் தொற்று நோய் தடுப்பு கொள்கைத் திட்டத்தில் அகதிகளை எல்லையில் வைத்து திருப்பியனுப்பும் நடவடிக்கை, முடிவுக்குக் கொண்டுவரப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் தடுப்பு கொள்கைத் திட்டத்தின் பிரகாரம் 2020 மார்ச் முதல் ஒக்டோபர் நடுப்பகுதிக்கு இடையிலான காலப்பகுதியில் மட்டும், இக்கொள்கைத் திட்டத்தின் பிரகாரம் குறைந்தபட்சம் 544 அகதிகளை எல்லையில் வைத்து, கனடா திருப்பியனுப்பியது.

கொரோனா வைரஸ் தொற்றின் போது, கனேடியர்களின் சுகாதாரப் பாதுகாப்பு கவலைகள் காரணமாக இந்த நடவடிக்கை அவசியமென, கனடா கூறியுள்ளது. எனினும், அகதிகளுக்கான சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமையாளர்கள் கனடாவின் இந்த நடவடிக்கை விவேகமானதாக அமையாதென, வாதிட்டனர்.

தொழில்முறை விளையாட்டு வீரர்கள் தொற்றுநோய்களின் போது, கனடா வருவதற்கு வழங்கப்பட்ட விலக்குகளை, அவர்கள் சுட்டிக்காட்டினர். அத்துடன், பாதுகாப்புத் தேடி கனடாவிற்கு வருகை தரும் பொதுமக்களைத் தடுக்கும் அதேவேளை, சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பதில், அர்த்தமில்லையென, அகதிகள் நல வழக்கறிஞரும், கனேடிய சங்கத்தின் முன்னாள் தலைவருமான, மவுரீன் சில்காஃப் தெரிவித்துள்ளார்.

## ஐரோப்பாவில் வேகமெடுக்கும் கொரோனா தொற்று ஏழு லட்சம் பேர் இறந்துபோகும் அபாயம்

ஐரோப்பிய நாடுகளில் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் ஏழு இலட்சம் பேர் கொரோனா தொற்றினால் உயிரிழக்கக் கூடுமென, உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலகம் முழுவதும் பரவியுள்ள கொரோனாத் தொற்றினால் ஐரோப்பிய நாடுகளில் மாத்திரம் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 1.5 மில்லியனையும், தாண்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அங்கு மீண்டும் கொரோனா தொற்றின் தாக்கம் வேகமெடுத்துள்ளதாகவும், உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்குமெனவும், எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, ஒரு சில நாடுகள் மீண்டும் கடுமையான கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதற்கு ஆயத்தமாகியுள்ளதுடன், மக்கள் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ள வேண்டுமென, தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அதேநேரம் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு எதிராக, மக்கள் போராடும் நிலையும், ஏற்பட்டுள்ளது.

## ஜனநாயகம் குறித்த உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு உலகநாடுகளின் பிரதிநிதிகளுக்கு

### -அமெரிக்க ஜனாதிபதி அழைப்பு-



ஜனநாயகம் குறித்த மெய்நிகர் உச்சிமாநாட்டில் பங்கேற்குமாறு 110 நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதில் முக்கிய மேற்கத்திய நட்பு நாடுகள் உட்பட ஈராக், இந்தியா, மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், அமெரிக்காவின் பிரதான போட்டியாளரான சீனா, தாய்வான் போன்ற நாடுகளுக்கு ஜோ பைடன் அழைப்பு விடுக்கவில்லை.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை பீஜிங்கை மேலும் கோபப்படுத்தும் சூழ்நிலையினை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும், டிசம்பர் 9 தொடக்கம் 10ஆம் திகதிகளில் திட்டமிடப்பட்ட இணையவழி மாநாட்டில், இஸ்ரேல் மற்றும் ஈராக் மட்டுமே மத்திய கிழக்கு நாடுகள் என்ற வகையில் பங்கெடுக்குமெனவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைப் போலவே நேட்டோவில் உறுப்பினராக உள்ள துருக்கியும் பங்கேற்பாளர்களின் பட்டியலில் இணைக்கப்படவில்லை. மேலும், அமெரிக்காவின் பாரம்பரிய அரபு நட்பு நாடுகளான எகிப்து, சவுதி அரேபியா, ஜோர்தான். கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் என்பனவும் அழைக்கப்படவில்லை.


வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் - 2022

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

ஒப்பந்தங்கள், பொருட்கள், பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரித்தல் அத்துடன் சேவைகளை வழங்குதல்


2022 ஆண்டு காலப்பகுதியில் ஒப்பந்தங்கள், பொருட்கள், பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு அத்துடன் சேவைகளை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்வதற்கு ஆர்வமுள்ள கீர்த்திமிக்க தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களது ஒப்புதலளிக்கப்பட்ட முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஏனைய வியாபார தாபனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி - 2021 திசெம்பர் 10

விண்ணப்பப்படிவத்தினை https://www.cbsl.gov.lk/en/tenders என்ற இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்துகொள்ளலாம்

செயலாளர்
இலங்கை மத்திய வங்கி


## 96 கோடி ரூபாவிற்கு ஏலம்போன சார்பியல் கோட்பாட்டின் கையெழுத்துப் பிரதி



ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் எழுதிய சார்பியல் கோட்பாட்டின் கையெழுத்துப் பிரதி 96.77 கோடி ரூபாவிற்கு (13 மில்லியன் டொலர்) ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

பாரிஸிலுள்ள கிறிஸ்டி என்ற ஏல நிறுவனம், ஆல்பர்ட் கைப்பட எழுதிய பிரதியை ஏலத்தில் விட்டது. அப்போது ஏராளமான நபர்கள், பிரதியை வாங்குவதற்கு ஆர்வம் காட்டினர்.

இறுதியில், அந்த சார்பியல் கோட்பாட்டின் கையெழுத்துப் பிரதி, 13 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலம் போயுள்ளது. ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சார்பியல் கோட்பாடு கையெழுத்துப் பிரதியின் மதிப்பு 2.4 மில்லியன் முதல் 3.5 மில்லியன் டொலர்களென ஏல நிறுவனம் மதிப்பிட்டிருந்தது.

சார்பியல் கோட்பாடு நூல் 1913-ம் ஆண்டு மற்றும் 1914-ம் ஆண்டின் முற்பகுதியில் ஐன்ஸ்டீன் மற்றும் மைக்கேல் பெஸ்ஸோ ஆகியோரினால் இணைந்து எழுதப்பட்ட 54 பக்க கையெழுத்துப் பிரதி ஆகும்.

முன்னதாக இந்தக் கையெழுத்துப் பிரதியின் மதிப்பு, 2.4 மில்லியன் முதல் 3.5 மில்லியன் டொலர்களென ஏல நிறுவனம் மதிப்பிட்டிருந்தது.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சார்பியல் கோட்பாடு இயற்றிய காலம் பொதுச் சார்பியல் கோட்பாட்டின் வளர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டமாகும். கோட்பாட்டின் நூல்களை ஆவணப்படுத்துவதற்கு எஞ்சியிருக்கும் இரண்டு கையெழுத்துப் பிரதிகளில் இதுவும் ஒன்றாகுமென, கிறிஸ்டி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சர்வதேசப் பயங்கரவாதிகளின் பட்டியலில் ஹிஸ்புல்லாவையும் இணைத்தது அவுஸ்திரேலியா



ஹிஸ்புல்லா அமைப்பின் அனைத்துப் பிரிவுகளையும் பயங்கரவாத அமைப்பாக ஆஸ்திரேலிய அரசாங்கம் பட்டியலிட்டுள்ளது. லெபனான் மீது கணிசமான அதிகாரம் செலுத்தி வரும் இந்த இயக்கத்தின் ஆயுதப் பிரிவுகள் மீதான தடையை நீட்டித்துள்ளது.

ஈரான் ஆதரவு கொண்ட ஷியா குழுவானது, ஆஸ்திரேலியாவிற்கு அச்சுறுத்தலாக உள்ளதென்றும், பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவை வழங்குவதாகவும், உள்துறை அமைச்சர் ஆண்ட்ரூஸ் தெரிவித்தார்.

ஹிஸ்புல்லா அமைப்பின் ஒரு பகுதி அரசியல் கட்சியாகவும், ஒரு பகுதி ஆயுதக் குழுவாகவும், மற்றொரு பகுதி லெபனானின் ஷியா சமூகத்திற்கு அடிப்படையான சேவைகளை வழங்கும் இயக்கமாகவும், செயல்படுகின்றது.

இஸ்ரேல் மீதான பல ரொக்கெட் தாக்குதல்களுக்கு ஹிஸ்புல்லா அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. உள்நாட்டுப் போர் முடிவடைந்ததிலிருந்து இன்றுவரை ஆயுதங்களை கைவிட மறுக்கும் ஒரே இயக்கம், ஹிஸ்புல்லா அமைப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீட்டிழுப்பில் வீழ்ந்த கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்ய முடியாமல் தடுமாறும் பெண்மணி




கனடாவில் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் விழுந்த கோடிக்கணக்கான பணத்தை என்ன செய்வதெனத் தெரியாமல் பெண்ணொருவர் தடுமாறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் எட்மண்டன் பகுதியில் வசிக்கும் சகிதா நாராயணன் எனும் பெண்ணுக்கு லொட்டோ 649 அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் (2,62,71,56,223.45 ரூபா) பரிசு விழுந்துள்ளது.

இதனால், அவர் தற்போது பெரும் செல்வந்தராக மாறியுள்ளார். இந்த நிலையில், விழுந்த பரிசு பணத்தை என்ன செய்வதெனத் தெரியாமல், திணறுகிறார் சகிதா.

எனினும், தனது கனவு சமையலறையை வீட்டில் அமைக்க வேண்டும். இளைய மகளுக்கு கார் வாங்கி கொடுக்க வேண்டும் என்பது, தனது ஆசையெனவும், அவர் தெரிவித்துள்ளார்.

## பர்கினோ பசோவில் பயங்கரவாதிகள் தாக்குதல்;19 பேர் பரிதாபமாகப் பலி

பர்கினோ பசோவின் சமண்டென்ஹா மாகாணத்தில் இராணுவ முகாம் அருகே பயங்கரவாதிகள் திடீர்த் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த தாக்குதலில் பாதுகாப்பு படையினர் 9 பேர் உட்பட மொத்தம் 19பேர் உயிரிழந்ததாகவும் பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, அப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். மேலும், தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளைத் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

இங்கு அல்கொய்தா, ஐ.எஸ். போன்ற பயங்கரவாத அமைப்புகள் ஆதிக்கம் செலுத்தி வருவதனால், இவர்கள் பொது மக்கள், பாதுகாப்பு படையினர் மீது, அடிக்கடி தாக்குதல் நடத்தி வருவதாகவும், அத்தாக்குதலில் பலர் உயிரிழந்துள்ளதாகவும், கூறப்படுகின்றது.




இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.